வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk | மலர் : 01 | 04.09.2021 சனிக்கிழமை | இதழ் : 274 | பக்கங்கள் : 16






# நியூசிலாந்தில் தாக்குதல் நடத்திய இலங்கையர் சுட்டுக்கொலை!

## ஐ.எஸ். கொள்கையால் ஈர்க்கப்பட்டவர் என நியூசிலாந்து பிரதமர் தகவல்



ஒக்லாந்து, செப். 04

நியூசிலாந்தில் ஒக்லாந்தில் வணிக வளாகமொன்றில் நேற்றுக்காலை கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்டு ஆறு பேரை காயப்படுத்தியவரை பொலிஸார் சுட்டுக்கொன்றனர். இவ்வாறு சுட்டுக் கொல்லப்பட்டவர் இலங்கையைச் சேர்ந்தவர் என நியூசிலாந்து

15

# செப். 13 காலை வரை ஊரடங்கு சட்டம் நீடிப்பு

## கோவிட் ஒழிப்புக்கான விசேட கூட்டத்தில் முடிவு

கொழும்பு, செப்ரெம்பர் 04

தற்போது நடைமுறையில் உள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டத்தை, செப்ரெம்பர் 13ஆம் திகதி அதிகாலை 4.00 மணி வரை நீடிப்பதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையில், நேற்று மெய்நிகர் வழியே இடம்பெற்ற கோவிட் ஒழிப்புக்கான விசேட கூட்டத்தின் போதே, இந்தத் தீர்மானம் எட்டப்பட்டது.

15

# தாக்குதல்தாரி தொடர்பான தகவல்களை வழங்குங்கள்

## நியூசிலாந்திடம் இலங்கை கோரிக்கை

கொழும்பு, செப். 04

நியூசிலாந்தின் வணிக வளாகம் ஒன்றில் ஆறு பேரை கத்தியால் குத்தி காயப்படுத்திய இலங்கையர் தொடர்பான தகவல்களை வழங்குமாறு இலங்கை அரசாங்கம் அந்த நாட்டிடம் கோரியுள்ளது.

இலங்கை தூதுவரின் ஊடாக இந்த கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது. நியூசிலாந்தில் ஆறு பேரை கத்தியால் குத்தி காயப் படுத்திய இலங்கையர் ஒருவர் காவல்துறையின

15

# புதுக்குடியிருப்பில் 65 பேர் உட்பட வடக்கில் நேற்று 126 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், செப். 04

புதுக்குடியிருப்பு மருத்துவ அதிகாரி பிரிவில் 2, 3 வயது குழந்தைகள் இருவர் உட்பட 65 பேருக்கு நேற்று தொற்று உறுதி செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் ஆய்வு கூடத்தில் நேற்று 438 பேரின் மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 126 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதன்படி, புதுக்குடியிருப்பு மருத்துவ அதிகாரி பிரிவில் 65 பேர்,

15

# யாழ்ப்பாணத்தில் 409 தொற்றாளர்!

யாழ்ப்பாணம், செப். 04

யாழ்ப்பாணத்தில் நேற்று மாலை 4 மணி வரையான 24 மணி நேரத்தில் 370 பேரும், நேற்றிரவு வெளியான யாழ். போதனா மருத்துவமனை ஆய்வுகூட அறிக்கையின் பிரகாரம் 39 பேருமாக 409 பேர் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

4 மணி வரையான தரவுகளின்படி பி.சி.ஆர். பரிசோதனையில் 31 பேரும், அன்ரிஜென் பரிசோதனையில் 339 பேரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

இதன்படி, சாவகச்சேரி மருத்துவ அதிகாரி பிரிவில் 133 பேரும், கரவெட்டியில் 66 பேரும், யாழ்ப்பாணத்தில் 27 பேரும், கோப்பாயில் 20 பேரும், சங்கானையில் 19 பேரும், ஊர்காவற்று

15


# யாழ்ப்பாணத்தில் நேற்று 6 பேர் தொற்றுக்கு பலி!

யாழ்ப்பாணம், செப். 04

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் மேலும் 6 பேர் கோவிட்-19 நோயினால் உயிரிழந்தனர். இவர்களில் ஒருவர் கைதடி அரச முதியோர் இல்லத்தில் பராமரிக்கப்பட்ட 82 வயது முதியவர் என்று யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற மாங்குளத்தைச் சேர்ந்த 79 வயது ஆண், கச்சேரி நல்லூர் வீதியைச் சேர்ந்த 71 வயது பெண், நெல்லியடி கரணவாயைச் சேர்ந்த 52 வயது ஆண் ஆகியோர் உயிரி

15



# 113 ஆண்கள் உள்ளிட்ட மேலும் 202 பேர் மரணம்

## கொரோனா மொத்த உயிரிழப்பு 9,806

கொழும்பு, செப். 04

நாட்டில் மேலும் 202 பேர் கொரோனா வைரஸ் தொற்றால் நேற்றுமுன்தினம் மரணமடைந்தனர் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவ நிபுணர் அசேல குணவர்தன தெரிவித்தார்.

இதையடுத்து நாட்டில் பதிவான கொரோனா மரணங்

15

# நேற்று 3,644 பேருக்கு கொரோனா தொற்று

கொழும்பு, செப். 04

நாட்டில் நேற்று 3 ஆயிரத்து 644 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் மொத்த எண்ணிக்கை 4 இலட்சத்து 51 ஆயிரத்து 401 ஆக எகிறியுள்ளது.

இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட

15



## இப்படியும் நடக்கிறது...!

ஒரு மலைப் பிரதேசத்தில் மலை உச்சியில் ஓர் இனத்தவர்களும், அடிவாரத்தில் இன்னோர் இனத்தவர்களும் வாழ்ந்து வந்தார்கள். இரு இனத்தவருக்கும் எப்போதும் பகை.

ஒரு முறை உயரத்தில் இருந்தவர்கள் அடிவாரத்தைச் சேர்ந்த ஒரு குழந்தையைக் கடத்தி விட்டார்கள்.

சமூகத்திலிருந்த சில பெரியவர்கள், மலைமேல் இருந்த சமூகத்தினரிடம் சமாதானமாகப் போய் பேசினால் குழந்தையை மீட்டு வந்து விட சாத்தியம் இருப்பதாக ஊரில் உள்ள இளைஞர்களிடம் அறிவுரை கூறினர்.

இளைஞர்கள் சிலர் உடனே முன்வந்தார்கள். அவர்கள் கடினமான வேலைகள் செய்து பழகியவர்கள். எந்தச் செயலை எடுத்தாலும் அதை விடாமுயற்சியுடன் முடிக்கும் மனப்போக்கைக் கொண்டவர்கள். ஊர் பெரியவர்களும், இந்தச் செயலை முடிக்க இவர்கள்தான் சிறந்தவர்கள் என்று அவர்களை வாழ்த்தி அனுப்பி வைத்தார்கள்.

இளைஞர்களும் ஆர்வத்துடன் கிளம்பினார்கள். அந்த மலையின் சில பகுதிகள் மிகவும் செங்குத்தானவை. அந்த இளைஞர்களால் அப்படி ஒரு பகுதியை ஏறிக் கடக்க முடியவில்லை. விடாமுயற்சியுடன் அப்பகுதியைக் கடக்க பலமணி நேரமாக பல வழிகளில் முயன்று கொண்டிருந்தனர். களைத்துப் போனால் ஓய்வெடுத்துக் கொண்டு மீண்டும் முயற்சித்தனர்.

அப்போது தம் ஊரைச் சேர்ந்த ஒரு பெண் மேலேயிருந்து கடத்தப்பட்ட குழந்தையைத் தூக்கிக் கொண்டு கீழே இறங்கி வருவதைப் பார்த்தார்கள். அவள் அருகில் வந்தவுடன் "நாங்கள் ஏற சிரமப்பட்ட மலையை நீ ஏறிச் சென்றுவிட்டாயே! எப்படி?" என்று வியப்புடன் கேட்டார்கள்.

அவள் இடுப்பிலிருந்த குழந்தையைக் காட்டி "இது உங்கள் குழந்தை இல்லை. என் குழந்தை. அதுதான் வித்தியாசம்" என்று பதில் சொன்னாள்.

ஆசிரியர்கள் சம்பளப் பிரச்னை தொடர்பாகப் போராட்டம் நடத்தி வருவதும், அதற்கு தீர்வாக அமைச்சரவை முடிவெடுத்ததும் பழைய செய்திதான்.

ஆனால், அமைச்சரவையின் முடிவை தாங்கள் ஏற்கப் போவதில்லை என்று ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்திருந்த கருத்து தொடர்பாக அண்மையில் நம்ம அப்புக்குட்டியர் ஒரு கருத்தைத் தெரிவித்திருந்தார்.

அதனைப் படித்த நண்பர் ஒருவர் குறுந்தகவல் அனுப்பினார், 'இன்றைய அப்புக்குட்டியர் கருத்து அருமை. போராட்டம் நடத்தும் ஆசிரியர்களுக்கு மரண அடி' என்று அந்தக் குறுந்தகவல் சொன்னது. அவரின் கருத்தை அப்புக்குட்டியருக்கு பகிர்ந்துகொண்டேன்.

ஆசிரியர் சங்கங்கள் பணிப் பகிஷ்கரிப்பு போராட்டம் நடத்தினாலும் வடக்கு, கிழக்கில் தமிழ் ஆசிரியர் சங்கத்தினர் தங்கள் கடமையைச் செய்துகொண்டிருக்கிறார்கள். வகுப்புக்கள், பாடங்கள், பரீட்சைகள்கூட இணையவழியில் நடக்கின்றன.

இலங்கை ஆசிரியர் சங்கத்தினர் தலைமையிலேயே போராட்டம் நடக்கிறது. அதனால்தானோ என்னவோ நமது ஜே.வி.பி.யின் வடக்கு மாகாண இணைப்பாளர் சந்திரசேகரன், தனது முகநூலில் இங்கு பகிஷ்கரிப்பில் கலந்துகொள்ளாத ஆசிரியர்களை சீண்டிப்பாத்திருக்கிறார்.

'உங்களுக்கும் சேர்த்து தெற்கில் நாங்கள் போராடுகிறோம். ஆனால், நீங்கள் வடக்கில் ஒற்றுமைக்காக நிற்கிறீர்களா? என்று கேட்டிருக்கிறார் அவர்.

அவரின் இந்தக் குறிப்பைப் பார்த்ததும் எனக்கு மலையில் ஏறி தன் பிள்ளையை மீட்டுவந்த தாய் நினைவுக்கு வந்தாள்.

மலையேறுவது கஷ்டமானதுதான், என்றாலும் பிள்ளையை மீட்கவேண்டும் என்று நினைத்த தாயைப் போலத்தான் நமது தமிழ் ஆசிரியர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பது சந்திரசேகரனுக்கு தெரியாமல் இருக்கலாம்.

சம்பளம் போதவில்லை என்பதற்காக நமது பிள்ளைகளைக் கைவிட்டுவிட அவர்கள் தயாராக இல்லை. ஆசிரியர்களின் சம்பளம் அதிகரிக்கப்படவேண்டும் என்பதில் மாற்றுக்கருத்து இருக்கமுடியாது.

ஆனால், அதற்காக நமது பிள்ளைகளின் எதிர்காலத்தை-தமது சம்பளத்தை அதிகரிப்பதற்காக காவுகொடுக்கமுடியாது. இதனைத்தான் நமது ஆசிரியர்கள் செய்துகொண்டிருக்கிறார்கள்.!

**- ஊர்க்குருவி**

# அநாவசியமாக நடமாடுவதை பொதுமக்கள் தவிர்க்க வேண்டும்

## திருகோணமலை அரச அதிபர் வலியுறுத்து



திருகோணமலை, செப். 04

பொதுமக்கள் அநாவசியமாக நடமாடுவதை தவிர்த்தல் இன்றியமையாது என்று தெரிவித்து திருகோணமலை மாவட்டச் செயலாளர் சமன் தர்சன பாண்டிகோராள, "மக்களின் பொறுப்பற்ற நடவடிக்கைகள் ஆபத்தை நோக்கிப் பயணிக்க ஏதுவாக அமையும்" என்றார்.

எனவே, தற்போதைய அபாயகர நிலையை கருத்திற்கொண்டு ஒவ்வொருவரும் செயல்டுமாறு அவர் அறிவுறுத்தியுள்ளார்.


திருகோணமலை மாவட்ட கோவிட் செயலணிக் கூட்டம், மாவட்டச் செயலகத்தில், பாராளுமன்ற உறுப்பினரும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் தலைவருமாகிய கபில நுவன் அத்துக்கோராள தலைமையில் நடைபெற்றது.

இதன்போது மேலும் கருத்துரைத்த மாவட்டச் செயலாளர்,

"மாவட்டத்தில் உள்ள கிராமியக் குழுக்களை மேலும் வலுப்படுத்தி, வைரஸ் பரவாமல் இருக்க ஆவண செய்ய வேண்டும். இக்குழுவை வலுப்படுத்துவதன் மூலம், கிராமங்களில் வைரஸ் பரவாமல் மக்களை பாதுகாக்க முடியும்.

இக்காலப் பகுதியில் மக்கள் மிக அவதானத்துடனும் பொறுப்புடனும் செயல்படல் வேண்டும். உரிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உரிய தரப்பினரை ஒன்றினைத்து வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்த உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்" என்றார்.

# வவுனியாவில் 161 தொற்றாளர்



வவுனியா, செப். 04

வவுனியாவில் 161 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதாக சுகாதார பிரிவினர் தெரிவித்தனர்.

வவுனியாவில் கொரோனா தொற்றாளர்களுடன் தொடர்புகளை பேணியவர்கள், வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டவர்கள் மற்றும் எழுமாற்று அன்ரிஜென், பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்று முன்தினம் இரவு வெளியிடப்பட்டன.

இதன்படி, வவுனியா மாவட்டத்தில் 161 பேருக்கு நேற்று முன்தினம் தொற்று உறுதிப் படுத்தப்பட்டது.

இந்நிலையில், தொற்றாளர்களை கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு அனுப்பி வைப்பதற்கும், அவர்களுடன் தொடர்புடையவர்களை சுய தனிமைப் படுத்துவதற்கும் சுகாதாரப் பிரிவினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

இதேவேளை, கடந்த ஒரு மாதத்தில் மாத்திரம் 3 ஆயிரத்து 328 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

கல்வி TV CHANNEL-1

**04.09.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 05.15 | தரம்-06 | கணிதம் |
| 06.00 | தரம்-07 | கணிதம் |
| 06.45 | தரம்-08 | விஞ்ஞானம் |
| 07.30 | தரம்-09 | கணிதம் |
| 08.15 | தரம்-10 | தமிழ் |
| 09.00 | மாணவர்களுக்கானது | ஆலோசனை |
| 09.15 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.15 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.15 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.15 | General knowledge | General knowledge |
| 12.30 | 06 TO சாதாரணதரம் | English |
| 01.15 | க.பொ.த. சா.தரம் | மனைப்பொருளியல் |
| 02.00 | க.பொ.த. சா.தரம் | சித்திரம் |
| 02.45 | க.பொ.த. சா.தரம் | தமிழ் இலக்கியம் |
| 03.30 | க.பொ.த சா.தரம் | கத்தோலிக்கம் |
| 04.15 | க.பொ.த. சா.தரம் | புவியியல் |
| 05.00 | A/Lவினாத்தாள் | Live Telecast வணிகப்பிரிவு |
| 06.00 | தரம்-05 | புலமைப்பரிசில் சிங்களம் |
| 07.00 | A/Lவினாத்தாள் | மறு ஒளிபரப்பு |
| 08.00 | தரம்-05 | புலமைப்பரிசில் மறு ஒளிபரப்பு அனைத்துப் பாடங்களும் |
| 09.00 | க.பொ.த.உயர்தரம் | ஊடகம் |
| 10.00 | க.பொ.த.உயர்தரம் | கணக்கீடு |
| 11.00 | க.பொ.த.உயர்தரம் | கணிதம் |
| 12.00 | 06 TO Learning English | English |
| 12.45 | க.பொ.தா சா.தரம் | மனைப்பொருளியல் |
| 01.30 | க.பொ.தா சா.தரம் | சித்திரம் |
| 02.15 | க.பொ.தா சா.தரம் | தமிழ்இலக்கியம் |
| 03.00 | க.பொ.தா சா.தரம் | கத்தோலிக்கம் |
| 03.45 | க.பொ.தா சா.தரம் | புவியியல் |
| 04.30 | தரம்-10 | தமிழ் |

கல்வி TV CHANNEL - 2

**04.09.2021**
**சனிக்கிழமை**

| நேரம் | தரம் | |
|---|---|---|
| 06.00 | பஞ்சபுராணம் | பஞ்சபுராணம் |
| 06.15 | நற்கருணை | நற்கருணை |
| 06.30 | திருக்குறள் பொருள | நாள் ஒரு திருக்குறள் |
| 06.45 | PLAY GROUP | பாட்டு |
| 07.30 | முன்பள்ளி | அழகியல் |
| 08.15 | தரம்-01 | அழகியல் |
| 09.00 | தரம்-02 | கதை |
| 09.45 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 10.30 | தரம்-03 | சைவசமயம் |
| 11.15 | தரம்-04 | Computer |
| 12.30 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 01.15 | தரம்-05 | Computer |
| 02.00 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 02.45 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 03.30 | PLAY GROUP | பாட்டு |
| 04.15 | முன்பள்ளி | அழகியல் |
| 05.00 | தரம்-01 | English Cartoom |
| 05.15 | தரம்-02 | கதை |
| 06.00 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 06.45 | தரம்-03 | சைவசமயம் |
| 07.30 | தரம்-04 | Computer |
| 08.15 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 09.00 | தரம்-05 | Computer |
| 09.45 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 10.30 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 11.15 | தரம்-03 | கிறிஸ்தவம் |
| 12.30 | தரம்-03 | சைவசமயம் |
| 01.15 | தரம்-04 | Computer |
| 02.00 | தரம்-04 | கிறிஸ்தவம் |
| 02.45 | தரம்-05 | Computer |
| 03.30 | தரம்-05 | கிறிஸ்தவம் |
| 04.15 | புலமைப்பரிசில் பேப்பர் | புலமைப்பரிசில் பேப்பர் |
| 05.00 | English | CARTOON |
| 05.30 | English | பாட்டு |

Eelanadu
04.09.2021 சனிக்கிழமை
பிலவ வருடம், ஆவணி 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**E-mail: editor@eelanadu.lk,
news@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

## நாடு எங்கு செல்கின்றது?

இலங்கைத் தீவின் எதிர்காலம் என்ன என்னும் கேள்வி நாளுக்கு நாள் அதிகரித்துச் செல்கின்றது. அந்தளவிற்கு நிலைமைகள் மோசமடைந்து செல்கின்றன. பொருட்களின் விலை தொடர்ந்தும் அதிகரித்துச் செல்கின்றது. பொருட்களுக்கான கையிருப்பும் குறைந்து செல்கின்றது. மக்கள் சதொச விற்பனை நிலையங்களுக்கு முன்னால் நீண்ட வரிசையில் நிற்கின்றனர். இந்த நிலைமைகள் இலங்கையின் எதிர்கால நெருக்கடி நிலையை தெளிவாகவே எதிர்வு கூறுகின்றது.

ஊரடங்கு காலம் மேலும் நீடிக்கப்பட்டிருக்கின்ற நிலையில் வறுமைக் கோட்டிற்கு கீழ் வாழும் மக்கள் தொடர்ந்தும் நெருக்கடிகளை எதிர்கொண்டு வருகின்றனர். அவ்வாறானவர்கள்தான் சதொச விற்பனை நிலையங்களுக்கு முன்னால் வரிசையில் நிற்கின்றனர். ஊரடங்கு உத்தரவு காலத்தில் அதியாவசிய பொருட்களை கொள்வனது செய்வதிலும் நன்கு திட்டமிடப்பட்ட வேலைத்திட்டங்கள் காணப்படவில்லை. உலர் உணவுப் பொருட்களை பெற்றுக் கொள்வதில் மக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

இந்த நிலையில் தற்போது கோதுமை மாவின் விலையை பிறிமா நிறுவனம் அதிகரித்திருக்கின்றது. இதன் காரணமாக பேக்கரி உற்பத்தி பொருட்களின் விலை அதிகரிக்கும். இதுவரை பெற்று வந்த வருமான மூலங்களை மக்கள் பெருமளவு இழந்திருக்கின்ற நிலையில், பொருட்களின் விலைகள் அதிகரிப்பதானது, பெரும் நெருக்கடியை தோற்றுவிக்கும். இந்த நிலைமை சட்டம் ஒழுங்கையும் கேள்விக்குள்ளாக்கலாம். வறுமை நிலை அதிகரித்துச் செல்லும்போது, விளிம்புநிலை மக்கள் மத்தியில் விரக்தி ஏற்படலாம். இது சமூக ஒழுங்கை சீர்குலைக்கலாம்.

மொத்தத்தில் நாடு சரியான திசையை நோக்கிப் பயணிப்பதாகத் தெரியவில்லை. தற்போதைய நெருக்கடி நிலை, அண்மைக்காலத்தில் தீர்ந்துவிடக் கூடிய ஒன்றாகவும் தெரியவில்லை. இந்த நிலையில்தான் சர்வதேச நாணய நிதியத்திடமிருந்தும் அரசாங்கம் கடன்களை பெறுவதற்கு முயற்சிப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன. ஆரம்பத்தில் சர்வதேச நாணய நிதியத்தை அணுகுவதில் அரசாங்கம் இழுத்தடித்து வந்தது. தற்போது பஸில் ராஜபக்ஷ தலைமையில், மீண்டும் சர்வதேச நாணய நிதியத்தை அணுகும் முடிவை எடுத்திருக்கின்றது. ஏனெனில், அரசாங்கத்திற்கு வேறு தெரிவுகள் இல்லை. சீனாவிடம் செல்லலாம் ஆனால், அவ்வாறு செல்லும் ஒவ்வொரு சந்தர்ப்பங்களிலும் சீனாவின் பிடிக்குள் மேலும் சிக்கும் நிலையே உருவாகும்.

கொரேனாவின் விளைவுகளால் பல்வேறு நாடுகளும் நெருக்கடிகளை சந்தித்திருக்கின்றது என்பது உண்மையாயினும்கூட, அதனை ஒரு காரணமாகக் கூறிவிட்டு, ஆட்சியாளர்கள் தப்பித்துக் கொள்ள முடியாது. ஆட்சியின் மீது ஆசை கொண்டிருப்பவர்கள் நெருக்கடிகளை சமாளிக்கும் உபாயங்களை அறிந்திருக்கத்தான் வேண்டும். மக்கள் நெருக்கடிக்குள் சிக்கியிருக்கின்றபோது, அந்த நெருக்கடிகளை போக்குவதும், அவர்களை-மக்களை காப்பாற்ற வேண்டியதும் ஆட்சியாளர்களின் கடமை. அந்த கடமையை சரிவர செய்யாமல் விடுவதற்கு காரணங்களை தேட முடியாது.

ஏனெனில், கொரோனா பெருந்தொற்று நிலைமைகள் வெற்றிகரமாக கையாளப்பட்டிருந்தால், அதனை ஒரு தேர்தல் முதலீடாகவே அரசாங்கம் பயன்படுத்திக் கொண்டு, அடுத்த தேர்தல் வெற்றியை உறுதிப்படுத்தியிருக்கும். ஆரம்பத்தில் நிலைமை முற்றிலும் கட்டுப்பாட்டுக்குள் இருந்த போது, அதனை ஜனாதிபதியின் நிர்வாகத் திறன் என்றே அவரின் ஆதரவாளர் கூறினர். உலகில் கொரோனா நிலைமையை மிகவும் வெற்றிகரமாக கையாளுவதில் சீனாவிற்கு அடுத்த நிலையில் இலங்கை இருப்பதாக, பொதுஜன பெரமுன தம்பட்டம் அடித்துக் கொண்டது. ஆனால், இன்று நிலைமைகள் தலை கீழாகிவிட்டது. இப்போது, அதற்கான காரணங்களை கண்டுபிடிக்க முற்படுகின்றனர். வெற்றி ஏற்படும்போது அற்கான பெருமையை அரசாங்கம் எடுத்துக் கொள்ள முடியுமென்றால், தோல்வி ஏற்படும்போதும் அதற்கான முழுப் பொறுப்பும் அரசாங்கத்தையே சாரும். இந்த அடிப்படையில் சிந்தித்தால் நாட்டின் நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் வைத்துக் கொள்வதில் அரசாங்கம் கூறிக்கொண்ட அளவிற்கு வெற்றியை பெறவில்லை. தொடர்ந்தும் தோல்வியின் பாதையிலேயே செல்கின்றது.

# இரு ஐரோப்பிய நகரங்களிடையே நீதி கோரிய பயணம்!

- அலசுவது இராஜதந்திரி -

இலங்கையில் இடம்பெற்ற அடிப்படை மனித உரிமைகள் மீறல்களை சுட்டிக் காட்டி ஜெனிவா 48ஆவது மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடரின்போது நீதி கோரும் விதத்தில் பாரிஸிலிருந்து ஜெனிவா வரை புலம்பெயர் தமிழ் அமைப்புகளால் நீண்ட பயணமொன்று ஆரம்பமாகியுள்ளது.

பிரான்ஸின் தலைநகர் பாரிஸ் மற்றும் சுவிற்சர்லாந்தின் ஜெனிவா நகருக்கிடையிலான தூரம் 540 கிலோ மீற்றர்களாகும். கடந்த முதலாம் திகதி பாரிஸிலிருந்து புலம்பெயர் தமிழ் அமைப்புகளால் ஆரம்பிக்கப்பட்ட இந்தப் பயணம் எதிர்வரும் 13ஆம் திகதி ஜெனிவாவைச் சென்றடையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.



கடந்த பல வருடங்களாகவே வெளிநாடுகளில் வாழும் புலம்பெயர் அமைப்புகள் ஜெனிவா மனித உரிமைகள் பேரவை கூட்டத்தொடர் நிகழும் காலப்பகுதியில் வடக்கு - கிழக்கில் பாதிப்புற்ற தமிழ் மக்களுக்கு நீதி கோரி ஜெனிவா வரை ஐரோப்பிய நகரங்களிலிருந்து நீண்ட பயணங்களை நடத்தி வருகின்றன.

### அவலங்களை விளக்கும் புகைப்படங்கள்

அத்துடன், மூன்று தசாப்தகால யுத்தத்தின் போது வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு ஏற்பட்ட அவலங்களை எடுத்து விளக்கும் புகைப்படக் கண்காட்சிகளை ஜெனிவாவில் ஐ. நா. மனித உரிமைகள் பேரவை கட்டடத்துக்கு முன்பாகவும் அங்கு கூடுகின்ற புலம்பெயர் தமிழ் அமைப்புகள் நடத்துவது வழக்கமாகவும் இருக்கின்றது.

இத்தடவை கூட ஜெனிவா வரையிலான நீண்ட பயணம் ஆரம்பமாகும் முன்னர் பாரிஸில் இலங்கையின் வடக்கு - கிழக்கு தமிழர்களின் அவலங்களை எடுத்துக்காட்டும் புகைப்படக் கண்காட்சியொன்று ஆரம்பமாகியிருந்தது. இதன்பின்னர் எதிர்வரும் 13ஆம் திகதி பாரிஸிலிருந்து நகர்ந்து செல்கின்ற புலம்பெயர் அமைப்புகளின் பயணம் ஜெனிவாவை சென்றடைந்ததும் அங்கேயும் புகைப்படக் கண்காட்சியை நடத்துவதற்கு ஏற்பாடாகியுள்ளது.

தற்போது பாரிஸிலிருந்து ஜெனிவா வரையிலான பயணத்தை மேற்கொள்ளும் புலம்பெயர் அமைப்புகளைச் சேர்ந்த இலங்கைத் தமிழர்களில் அநேகர் வடக்கு - கிழக்கில் யுத்த நிலவரங்கள் முறுக்கேறியிருந்த காலத்தில் இலங்கையில் நேரடியாகவோ மறைமுகமாகவோ பாதிப்புகளை எதிர்நோக்கியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், தமது உயிரைக் கையில் பிடித்தவர்களாக தமது சொத்துக்களை விற்றும் உறவுகளைப் பிரிந்தும் இலங்கையில் கொழும்பு நகரையே சரிவரத் தெரிந்து கொள்ளாதவர்கள் மொழி, கலாசாரம், கால நிலை என்பவற்றால் பெரிதும் வேறுபட்ட ஐரோப்பிய நாடுகளுக்குச்சென்று கடின உழைப்பாலும், விடாமுயற்சியாலும் பலத்த சவால்களுக்கு மத்தியில் தமது இருப்பை தாம் தஞ்சம் கோரிய நாடுகளில் நிலை நாட்டியவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

இருந்தபோதிலும் கடந்த 40 வருடங்களில் இலங்கையின் வடக்கு - கிழக்கிலிருந்து புலம்பெயர்ந்து ஐரோப்பிய நாடுகளுக்கு மட்டுமல்ல. கனடா, நோர்வே, சுவீடன் , அவுஸ்திரேலியா போன்ற நாடுகளுக்கு புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களும் வியத்தகு விதத்தில் கல்வி, சமூக, பொருளாதார ரீதியாக தம்மை சிறப்புற வைத்துள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.


### தஞ்சம் கொடுத்த நாடுகள் திருப்தி

புலம்பெயர்ந்த தமிழர்கள் வாழ்கின்ற நாடுகளைச் சேர்ந்த அரசாங்கங்கள் தமது நாடுகளின் பொருளாதாரத்துக்கும், தொழில் துறை, கல்வித்துறை என்பவற்றுக்கு இலங்கை தமிழர்கள் வழங்குகின்ற பங்களிப்பு அபரிமிதமானது எனவும் குறிப்பிட்டுள்ளனர்.

இருந்தபோதிலும் வடக்கு - கிழககிலிருந்து உலக நாடுகள் பலவற்றுக்கும் புலம்பெயர்ந்த இலங்கைத்தமிழர்கள் இலங்கையில் தாம் பட்ட இன்னல்கள், தமது உறவுகள் எதிர்நோக்கியுள்ள இன்னல்கள் மற்றும் தமக்கு ஏற்பட்ட பாதிப்புகளை தற்போது தாம் வாழ்ந்து வருகின்ற வாழ்க்கை முறை காரணமாக புறந்தள்ளி விடாது தாம் எதிர்நோக்கிய மனிதாபிமானப் பிரச்னைகளுக்கு சர்வதேச சமூகத்திடம் நீதி வேண்டி நிற்பதையே பாரிஸ் நகரிலிருந்து ஜெனிவா வரையிலான பயணம் காண்பிப்பதாக இருக்கின்றது.

எனவே, இலங்கையில் யுத்தம் முடிவுற்று பன்னிரெண்டு வருடங்களாகியும் யுத்த வடுக்களோடும், பலதரப்பட்ட பாதிப்புகளோடும் தமக்கு நீதி கிடைக்காது இருந்து வருகின்ற வடக்கு - கிழக்கு மக்களுக்கு நியாயமான முறையில் இயங்குகின்ற புலம் பெயர் தமிழர் அமைப்புகள் சர்வதேச ரீதியில் ஒரு பக்க பலமாக இருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செப்ரெம்பர் - 04 சனிக்கிழமை
பிலவ வருடம் - ஆவணி 19
நல்ல நேரம் : 7.30 - 9.00
ராகு காலம் : 09.00 - 10.30
திதி : திரயோதசி




04.09.2021

**மேடம்**
சகிப்புத் தன்மை அதிகரித்து நன்மை காணுவீர்கள். நம்பிக்கையுடன் காத்திருந்த விஷயம் ஒன்று நிறைவேறும். யாரிடமும் எதிர்மறையாக பேசாதிருப்பது நலம்.

**இடபம்**
மனதுக்கு நெருங்கியவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.ஒரு வேலையை முழுதாக முடிக்க முடியாமல் சிரமப்படுவீர்கள் பணம் தருவதாக வாக்கு கொடுத்தவர்களால் ஏமாற்றம் ஏற்படலாம்.

**மிதுனம்**
பணியாளர்கள் எதிர்பார்த்த செய்தி ஒன்று கிடைக்கும். பெண்களுக்கு விரும்பிய விஷயங்கள் இன்று நிறைவேறும். நேர்மறை எண்ணங்கள் ஏற்படும். வளைந்து கொடுத்துப் போவீர்கள்.

**கடகம்**
சிலரின் செயல்கள் உங்களின் பொறுமையை சோதித்தாலும் சமாளிப்பீர்கள். சின்ன இடர் ஒன்றை எளிதாக சமாளிப்பீர்கள். உணவு வியத்தில் கவனமாக இருக்க வேண்டும்.

**சிம்மம்**
செலவுக்கு ஏற்ற வரவு வரும். எதிர்பார்த்த உதவி கிடைக்கும் நாள். சகோதர வழியில் சுபச்செய்தி உண்டு. பல நாள் தீர்மானித்த விஷயம் நிறைவேறுவதற்கான அறிகுறி தோன்றும்

**கன்னி**
நேர்மையான செயல் செய்து மனநிறைவு அடைவீர்கள்.உற்சாகத்துடன் பணி செய்வீர்கள். பெரியோரின் ஆசி கிடைக்கும். விலை உயர்ந்த மின்னணு பொருட்களை வாங்குவீர்கள்.

**துலாம்**
யோகமான நாள். பழைய பிரச்னைகளை தீர்ப்பீர்கள். நல்லவர்களின் ஆலோசனையால் சிக்கனத்தைக் கையாளுவீர்கள். கடின உழைப்பின் காரணமாக நன்மை உண்டு.

**விருட்சிகம்**
வழக்கில் சாதகமான தீர்ப்பு வருவதற்கான அடையாளம் தெரியும். குடும்பத்தில் மகிழ்ச்சி தங்கும். சுமார் லாபம் உண்டு. கடினமாக முயன்று வெற்றி இலக்கை நெருங்குவீர்கள்.

**தனுசு**
பேச்சிலும், செயலிலும் நிதானத்தைக் கடைப்பிடிக்க வேண்டிய நாள். பணிகளில் கவனமாக இருப்பது நல்லது. உணர்ச்சிவசப்படுவதன் மூலம் மனக்கசப்பை உருவாக்காதீர்கள்.

**மகரம்**
மகிழ்ச்சி அதிகரிக்கும் நாள். சிறிதளவு பணவரவு உண்டு. தாமதித்த விஷயங்கள் சுறுசுறுப்பாக நடைபெறும். கட்டிடப் பணியைத் தொடரும் எண்ணம் உருவாகும்.

**கும்பம்**
மிகவும் முயன்று வெளியூர்ப் பயணம் மேற்கொள்வீர்கள். உங்கள் திட்டம் சரியானதுதானா என்று யோசித்து இறங்குங்கள். வேகத்தைக் குறைத்துக் கொள்ள வேண்டியது அவசியம்.

**மீனம்**
எதிலும் முன்னெச்சரிக்கையுடன் செயல்படுவீர்கள். திட்டமிட்ட வேலையைத் தடுமாறி, பின் முடிப்பீர்கள். திடீர் நட்பு உருவானால் அது பற்றிய கவனம் தேவை.

# எடப்பாடி, சசிகலா விசாரிக்கப்படுவார்களா? விசாரணை செப்ரெம்பர் 27க்கு ஒத்திவைப்பு





சென்னை, செப். 04,

கொடநாடு வழக்கில் முன்னாள் தமிழக முதலமைச்சர் எடப்பாடி பழனிச்சாமி, சசிகலா உள்ளிட்டோரை விசாரிக்க கோரிய வழக்கு செப்ரெம்பர் 27ஆம் திகதிக்கு சென்னை உயர் நீதிமன்றம் நேற்று ஒத்திவைத்தது.

கொடநாடு கொலை கொள்ளை வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட 3 பேர் சென்னை வழக்கு தொடர்ந்தனர். அந்த வழக்கில், “கொடநாடு கொள்ளை விவகாரம் தொடர்பாக முன்னாள் முதலமைச் சர் எடப்பாடி பழனிச்சாமி, சசிகலா, இளவரசி, சுதாகரன் உள்ளிட்ட 8 பேரை இந்த வழக்கில் விசாரணை செய்யவேண்டும் விசாரணை செய்ய உத்தரவிட வேண்டும்” என்று சென்னை கோரியிருந்தனர்.

இந்த வழக்கை நேற்று விசாரித்த சென்னை உயர் நீதிமன்ற நீதிபதிகள், “இவர்களை விசாரிக்க வேண்டும் என்பதற்காக மனுதாரர்கள் மூவரும் குறிப்பிட்ட காரணங்கள் எதுவும் தெளிவானதாக இல்லை. கூடுதலாக சிலரை விசாரிக்க வேண்டுமென்பதற்கான காரணங்களை மனுதாரர்கள் விளக்கமாக கூறவில்லை. ஏன் விசாரிக்க வேண்டும். என்ற காரணங்கள் விரிவாக தாக்கல் செய்யவேண்டும் என்று மனுதாரர்களுக்கு உத்தரவு பிறப்பித்த நீதிபதிகள், இந்த வழக்கு தொடர்பாக தமிழக காவல் துறை பதில் அளிக்க வேண்டும் என்று கோரி, வழக்கு விசாரணையை வரும் செப்ரெம்பர் மாதம் 27 ஆம் திகதிக்கு ஒத்திவைத்து தள்ளிவைத்து உத்தரவிட்டுள்ளனர்.

# தமிழில் அர்ச்சனைக்கு தடையில்லை; சென்னை உயர் நீதிமன்றம் உத்தரவு!



சென்னை, செப். 04,

கோவில்களில் தமிழில் அர்ச்சனை செய்ய தடையில்லை என சென்னை உயர் நீதிமன்றம் நேற்று அதிரடியாகத் தீர்ப்பளித்துள்ளது. கோவில்களில் ஆகம விதிகளை மீறி தமிழில் அர்ச்சனை செய்யக்கூடாது எனவும் சமஸ்கிருதத்தில் மட்டுமே அர்ச்சனை செய்ய வேண்டும் எனவும் கூறி தாக்கல் செய்திருந்த மனு மீதே இந்த தீர்ப்பு அறிவிக்கப்பட்டது.

இந்த வழக்கு தலைமை நீதிபதி அமர்வில் நேற்று விசாரணைக்கு வந்தது. அப்போது நீதிபதிகள், ”ஏற்கெனவே பிறப்பிக்கப்பட்ட தீர்ப்பில் தமிழில் அர்ச்சனை செய்ய எந்த தடையும் இல்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எந்த மொழியில் பக்தர்கள் விருப்பப்பட்டு கேட்கிறார்களோ அந்த மொழியை அர்ச்சகர்கள் தேர்வு செய்து கொள்ளலாம். குறிப்பிட்ட மொழியில் தான் அர்ச்சனை செய்ய வேண்டும் என நீதிமன்றம் வற்புறுத்த முடியாது. விரிவான ஆய்வுக்கு பிறகு இந்த தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளதால் மறு ஆய்வுக்கு உட்படுத்த முடியாது.

கோவில்களில் தமிழில் செய்வது தொடர்பாக ஏற்கனவே உயர் நீமன்றம் தீர்ப்பளித்துள்ளது. 2008இல் வழங்கிய தீர்ப்பை மறு பரிசீலனை செய்ய எந்த அவசியமும் இல்லை” எனக்கூறி நீதிபதிகள் மனுவை தள்ளுபடி செய்து உத்தரவிட்டனர்.

# கைதுசெய்ய வேண்டும் என குற்றச்சாட்டு: காவல் ஆணையருடன் ஆர்யா சந்திப்பு!

சென்னை, செப். 04,

கைது செய்ய வேண்டும் என்ற குற்றச்சாட்டு எழுந்த நிலையில் தமிழகத்தின் பிரபல நடிகர் ஆர்யா, சென்னை காவல் ஆணையரை நேரில் சந்தித்து விளக்கமளித்துள்ளார். நேற்று முன்தினம் மாலை இச்சந்திப்பு இடம்பெற்றது.

நடிகர் ஆர்யா, தன்னை திருமணம் செய்து கொள்வதாகக்கூறி ரூ.70 இலட்சம் பெற்று மோசடி செய்ததார் என இலங்கையை பூர்வீகமாக கொண்ட ஜேர்மனியில் வசிக்கும் விட்ஜா, சென்னை பெருநகர காவல்துறையில் புகார் கொடுத்துள்ளார்.

இதையடுத்து நடிகர் ஆர்யாவுக்கு எதிராக வழக்குப்பதிவு செய்ய உத்தரவிடக்கோரி விட்ஜா சார்பில் சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. உயர் நீதிமன்றம், புகார் குறித்து விசாரணை செய்து பதிலளிக்குமாறு சென்னை சைபர் குற்றப்பிரிவுக்கு உத்தரவிட்டது. இந்த உத்தரவின் அடிப்படையில், நடிகர் ஆர்யாவிடம் சென்னை மத்திய குற்றப்பிரிவில் உள்ள சைபர் குற்றப்பிரிவினர் விசாரணை நடத்தினர்.



இதன் தொடர்ச்சியாக அந்த பெண்ணிடமும் விடியோ அழைப்பின் மூலம் விசாரணை செய்தனர்.இதையடுத்து இந்த வழக்கில் திடீர் திருப்பமாக நடிகர் ஆர்யா என்ற பெயரில் மாறு வேடத்தில் வேறு ஒரு நபர், அந்த பெண்ணிடம் பேசி பணம் மோசடி செய்திருப்பதை பொலிஸார் உறுதி செய்தனர். இந்நிலையிலேயே ஆர்யா பொலிஸ் ஆணையாளரை சந்தித்து விளக்கமளித்தார்.

# மருத்துவ அனுமதி கிடைத்தவுடன் பாடசாலை மாணவருக்கு தடுப்பூசி

## ஜனாதிபதி கோட்டாபய தெரிவிப்பு



**கொழும்பு, செப்.04**

**மருத்துவ வல்லுநர்களின் அனுமதி கிடைத்தவுடன் பாடசாலை மாணவர்களுக்கு பைசர் தடுப்பூசி போட முடியும் என்று ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்தார்.**

அடுத்த இரண்டு வாரங்களுக்குள் 20-29 வயதுக்குட்பட்டோருக்கான தடுப்பூசியை முடிக்க வேண்டியதன் அவசியத்தையும் அவர் வலியுறுத்தினார்.

நேற்று காலை நடைபெற்ற செயலணிக் குழு கூட்டத்தில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இதனை தெரிவித்தார்.

செப்ரெம்பர் 13ஆம் திகதி அதிகாலை 4 மணி வரை தற்போதைய ஊரடங்கு உத்தரவை நீடிக்க முடிவு செய்யப்பட்டது.

2020ஆம் ஆண்டில் மூன்று மாதங்களுக்கும் மேலாக நாடு மூடப்பட்டதால் நாட்டின் பொருளாதாரம் வரலாற்றில் முதல் முறையாக எதிர்மறையான திருப்பத்தை எடுத்தது.

ஒரு சிறிய பொருளாதாரம் கொண்ட நாடு என்ற முறையில், அனைத்து தரப்பினரும் யதார்த்தத்தைப் புரிந்து கொண்டு பொருளாதாரத்தைப் பாதுகாக்க முன்னேற பொறுப்புள்ள முடிவுகளை எடுக்க வேண்டும் என்று ஜனாதிபதி கூறினார்.

உலகின் பல நாடுகள் சுற்றுலாத் துறைக்குத் திறந்திருக்கின்றன.

அதே நேரத்தில், முடிவெடுப்பதில் வெற்றிகரமான முடிவுகளுக்கான சாத்தியங்களை ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

கோவிட்-19 நோய்த் தொற்று பரவல் கட்டுப்பாட்டுத் திட்டத்திற்கு ஏற்ப சுற்றுலா நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான சுகாதாரப் பரிந்துரைகளை விரைவாக வழங்குமாறு சுகாதாரப் பிரிவுகளின் தலைவர்களுக்கு ஜனாதிபதி அறிவுறுத்தினார். (அ)





# ஆரியகுளத்துக்கு அண்மையில் வீடொன்றில் பெரும் தீ விபத்து

## பல இலட்சம் பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசம்

யாழ்ப்பாணம், செப். 04

யாழ்ப்பாணம்-பருத்தித்துறை வீதியில் ஆரியகுளம் சந்திக்கு அண்மையாக உள்ள மேல்மாடி வீடொன்றில் ஏற்பட்ட தீவிபத்தில் பல இலட்சம் பெறுமதியான பொருள்கள் எரிந்து நாசமாகியுள்ளன.

இந்தச் சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் இடம்பெற்றது.

வீட்டில் சுவாமி அறையில் விளக்கேற்றி அங்கு வசிக்கும் பெண், வீட்டைப் பூட்டிவிட்டு ஆலயம் சென்று திரும்பிய நிலையில் வீட்டுக்குள் தீ விபத்து இடம்பெற்றதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் யாழ். மாநகர தீயணைப்புப் படைக்கு அறிவிக்கப்பட்ட நிலையில் அங்கு விரைந்த அவர்கள் தீயைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

# வெளிநாட்டவர்களின் வீஸா செல்லுபடியாகும் காலம் நீடிப்பு

கொழும்பு, செப். 04

நாட்டில் தற்போது தங்கியிருக்கும் வெளிநாட்டவர்களுக்கான சகல விதமான வீஸாக்களின் செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைவாக செப்ரெம்பர் 7ஆம் திகதியுடன் முடிவடையும் சகல விதமான வீஸாக்களின் செல்லுபடியாகும் காலம் ஒக்ரோபர் 7ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக குடிவரவு, குடியகல்வு திணைக்களம் அறிவித்துள்ளது.

கோவிட்-19 அச்சுறுத்தல் காரணமாக அலுவலகப் பணிகளில் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளால் வீஸா நீடிப்பை பெற்றுக் கொள்ளவதில் எதிர்நோக் கும் இடர்பாடுகளுக்கு தீர்வாக இவ்வாறு வீஸா செல்லுபடியாகும் காலம் நீடிக்கப்பட்டுள்ளது.

# கொரோனா தொற்றினால் இராணுவ பிரிகேடியர் பலி!

கொழும்பு, செப். 04

கோவிட் வைரஸுக்கு சிகிச்சை பெற்று வந்த இராணுவ பிரிகேடியர் டி.உதயசேன (வயது-53) நேற்று முன் தினம் இரவு உயிரிழந்தார்.

கொத்தலாவல பாதுகாப்பு அறிவியல் பீட வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் அவர் உயிரிழந்தார் என இராணுவம் தெரிவித்துள்ளது.

அவர் கொழும்பு மாலபே பகுதியில் வசித்து வந்தார்.

பிரிகேடியர் டி.உதயசேனா 31 வருடங்கள் இராணுவத்தில் பணியாற்றியுள்ளார்.

# அதிக விலைக்கு சீனி விற்றால் '1977' இற்கு முறையிடுங்கள்!

கொழும்பு, செப். 04

அரிசி மற்றும் சீனிக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையை மீறி அதிக விலைக்கு விற்பனை செய்யும் நபர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும் என்று நுகர்வோர் விவகார இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண தெரிவித்தார்.

"அரிசி மற்றும் சீனி வகைகளுக்கு கட்டுப்பாட்டு விலை நேற்றிரவு முதல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்த விலையைவிடவும் அதிக விலைக்கு கடைக்காரரோ அல்லது வர்த்தக நிறுவனங்களோ விற்பனையில் ஈடுபட்டால் அது தொடர்பில் 1977 என்ற தொலைபேசி இலக்கத்துக்கு தெரியப்படுத்தவும். நுகர்வோர் அதிகார சபை ஊடாக சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டு உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

அத்துடன், கட்டுப்பாட்டு விலையை மீறும் வியாபாரிகள் மற்றும் நிறுவனங்களுக்கு எதிராக விதிக்கப்படும் தண்டப் பணமும் அதிகரிக்கப்படவுள்ளது என்றும் கொழும்பில் நடைபெற்ற ஊடக சந்திப்பில் இராஜாங்க அமைச்சர் கருத்து வெளியிட்டார்.

# மன்னார் மாவட்டத்தில் மேலும் 21 கொரோனா தொற்றாளர்கள்

மன்னார், செப். 04

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை மேலும் புதிதாக 21 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதோடு, ஒரு கொரோனா மரணம் நிகழ்ந்துள்ளதாக மன்னார் மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி. வினோதன் தெரிவித்துள்ளார்.

மன்னார் மாவட்ட கொரோனா நிலவரம் தொடர்பாக அவர் நேற்று வெள்ளிக்கிழமை காலை விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

மன்னார் மாவட்டத்தில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலை மேலும் புதிதாக 21 கொரோனா தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

மேலும் மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலையில் கொரோனா தொற்றுடன் சிகிச்சை பெற்று வந்த மன்னார் முருங்கன் செட்டியார் கட்டையடம்பன் பகுதியைச் சேர்ந்த 67 வயதுடைய வயோதிபர் ஒருவர் உயிரிழந்தார்.

மாவட்டத்தில் கொரோனா தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 20 ஆக அதிகரித்துள்ளது.

மன்னார் மாவட்டத்தில் இவ்வருடம் 1704 கொரோனா தொற்றாளர்களும்,தற்போது வரை மொத்தமாக மன்னார் மாவட்டத்தில் 1721 கொரோனா தொற்றாளர்களும் அடையாளம் காணப்பட்டுள்ளனர்- என்றுள்ளது.

# கொக்குவிலில் இராணுவம்,பொலிஸ் நேற்று காலை விசேட சுற்றிவளைப்பு

யாழ்ப்பாணம், செப். 04

கொக்குவில் பகுதியில் யாழ். பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பிரசாத் பெர்னாண்டோ தலைமையில் இராணுவம் மற்றும் பொலிஸாரினால் விசேட சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கை நேற்று வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டது.



யாழ்ப்பாணத்தில் சமீபகாலமாக இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களுடன் தொடர்புடையவர்கள், அவ்விடங்களில் பதுங்கியிருப்பதாக இரகசியத் தகவல், யாழ். பொலிஸ் நிலையத்துக்கு கிடைக்கப் பெற்றுள்ளது.

அந்த தகவலுக்கமைய நேற்று அதிகாலை 4 மணி முதல் காலை 8 மணிவரை நூற்றுக்கும் மேற்பட்ட இராணுவத்தினர் மற்றும் பொலிஸாரினால், கொக்குவிலின் ஒரு பகுதி சுற்றிவளைக்கப் பட்டு, சந்தேகத்துக்கிடமான வீடுகளில் தேடுதல் நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

மேலும், இந்த திடீரென சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போது வன்முறைச் சம்பவங்களுக்கு பயன்படுத்தப்பட்டதாக சந்தேகிக்கப்படும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

யாழ். மாவட்டத்தில் ஊரடங்கு வேளைகளில் வாள் வெட்டுச் சம்பவங்கள் மற்றும் வன்முறைச் சம்பவங்கள் அடிக்கடி இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ரிஷாத் எம்.பிக்கு கைபேசி வழங்கிய சிறை அதிகாரிக்கு உடன் இடமாற்றம்

கொழும்பு, செப். 04

சிறைச்சாலையில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீனுக்கு கைபேசி வழங்கியதாக சந்தேகிக்கப்படும் சிறை அதிகாரி ஒருவர் விசாரணைகளுக்கு பின்னர் வவுனியா சிறைச்சாலைக்கு இடமாற்றப்பட்டுள்ளார். அறிக்கை ஒன்றை வெளியிட்டு சிறைச்சாலை திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் இதனைத் தெரிவித்தார்.

# கொரோனா தடுப்பூசி வழங்கலில் வியாபாரம்

## அக்மீமன தயாரத்தன தேரர் குற்றச்சாட்டு!

கொழும்பு, செப். 04

**தடுப்பூசி ஏற்றுவதால் ஏற்படும் பக்க விளைவுகளுக்கு அரசாங்கம் பொறுப்பேற்க வேண்டும் என சிங்கள ராவய அமைப்பின் தலைவர் அக்மீமன தயாரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் நேற்று இடம் பெற்ற ஊடகவியலாளர் சந்திப் பின்போதே அவர் இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

தற்போது நாட்டில் தடுப் பூசி வியாபாரமொன்று இடம் பெறுகின்றது.

ஜனாதிபதி தடுப்பூசி பெற் றுக்கொண்டாரா என்பது தெரி யாது. ஏனெனில் ,அவர் தடுப் பூசி ஏற்றிக்கொண்டதை நாம் பார்க்கவில்லை.

நல்லது எனக் கருதப்படும் தடுப்பூசிகளை இராணுவத்தின ரிடம் கையளித்துள்ளனர்.

அதன் ஊடாக உயர்மட்டத் தரப்பினருக்கு பைசர் தடுப்பூசி களை பெற்றுக்கொள்ளக்கூடிய தாகவிருந்தது.

எந்த தடுப்பூசி வழங்கப்பட் டாலும் நாம் அதனை ஏற்றுக் கொள்ளப்போவதில்லை. ஏனெ னில் இந்த தடுப்பூசிகளை ஏற் றிய பின்னரே அதிகளவிலா னோர் உயிரிழக்கநேரிட்டது.

அதேபோல் இந்த தடுப் பூசியை பெற்றுக்கொண்ட பின்னரே அதிகளவிலானோர் நோயாளர்களாக்கப்பட்டனர்.

ஆகவே, பலவந்தமாக தடுப் பூசிகளை ஏற்றுவார்களாயின் அப்பாவி மக்கள் தொடர்பான பொறுப்பை அரசாங்கம் ஏற்க வேண்டும்.

அதேபோல் மக்களுக்கு தடுப்பூசிகளினால் ஏற்பட்டுள்ள பக்க விளைவுகளுக்கு அரசாங் கமே பொறுப்பு கூறவேண்டும்.

சாதாரணமாக கொரோனா போன்ற நோய்நிலைகளுக்கான தடுப்பூசி கண்டுபிடிப்புக்கான ஆய்வுக்கு இரண்டு வருடங்க ளேனும் தேவைப்படும்.

முதலில் எலிகளுக்கு குறித்த தடுப்பூசிகள் ஏற்றி பரி சோதனை மேற்கொள்ளப்படும்.

அதனை தொடர்ந்து மாடு களுக்கு ஏற்றி பரிசோதிப்பர்.

அதனை தொடர்ந்து எமது நாட்டு மக்களையும் மாடுகள் என கருதி அவர்களுக்கும் ஏற்றுகின்றனர்.

இந்த தடுப்பூசிகளின் ஊடாக கொரோனா தொற்றிலி ருந்து விடுபடலாமாயின் அமெ ரிக்காவில் 11 வீதமானவர்களே தடுப்பூசி ஏற்றிக்கொண்டுள்ள னர். அதேபோல் அவுஸ்திரே லியாவில் 9வீதமானவர்களே தடுப்பூசி ஏற்றியுள்ளனர். இஸ் ரேலில் எவரும் தடுப்பூசிகளை ஏற்றிக்கொள்ளவில்லை-என் றார்.

(அ)

## கொரோனா சடலங்களை எரியூட்ட

# "கட்டணம் செலுத்த இயலாதவர்கள் தொடர்பு கொண்டால் உதவ தயார்!"

யாழ்ப்பாணம், செப். 04

கொவிட் தொற்றுக்குள் ளாகி இறப்பவர்களின் சடலங் களை எரிக்க யாழ் மாநகர சபை யினால் 6500 ரூபாய் கட்டணம் அறிவிடப்படுகின்றது. எனி னும் அந்தக் கட்டணத்தை செலுத்த முடியாதவர்கள் யாரா வது தனிப்பட்டை முறையில் என்னை தொடர்பு கொண்டால் அவர்களுக்கு என்னால் உதவ முடியும் என யாழ். மாநகர முதல்வர் சட்டத்தரணி வி. மணிவண்ணன் தெரிவித்தார்.

யாழ்.மாநகர ஆளுகைக்குள் உள்ள மின் மயான தகனம் தொடர்பில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவிக்கை யில்-

யாழ்ப்பாணத்தில் அண் மைக்காலமாக தொற்றுக்கு உள்ளாகி மரணிப்பவர்களின் எண்ணிக்கை அதிகரித்து காணப்படுகின்றது.

யாழ்.மாவட்டத்தை பொறுத்தவரை கொவிட் தொற்றினால் மரணிப்பவர்கள் யாழ்ப்பாணம் கோம்பையன் மணல் இந்து மயானத்தில் அமைந்துள்ள மின் தகன மயா னத்தில் எரிக்கப்பட்டு வருகின் றனர்.

இந்த மயானம் யாழ் மாநகர சபையின் ஆளுகைக்கு உட்பட் டது.

குறித்த மயானத்தில் நாளொன்றுக்கு 5 உடல்கள் தகனம் செய்யப்பட்டு வருகின் றன. எனினும் எதிர்வரும் 8ஆம் திகதிவரை சடலங்களை எரிப்ப தற்கான முன்பதிவு செய்யப்பட் டுள்ளது. இதனால் வைத்திய சாலையில் அதிகளவிலான சடலங்கள் தேங்கி காணப்படு கின்றன.

நாளொன்றுக்கு அதிகளவி லான சடலங்களை எரியூட்டுவ தற்கான தகமை எம்மிடம் இல்லை. அதையும் மீறி நாங் கள் ஒன்று இரண்டு சடலங் களை கூடுதலாக எரியூட்டும் போது குறித்த எரியூட்டி அடிக் கடி பழுதடைய கூடிய சந்தர்ப் பம் காணப்படுகின்றது.

எனவே எரியூட்டும் தக மையை அதிரித்து எமக்கு இன்னுமோர் எரியூட்டியை வழங்குமாறு நாம் சம்பந்தப் பட்ட தரப்பினரிடம் கோரிக்கை விடுத்துள்ளோம்.

குறித்த கோரிக்கை நிறைவேற் றப்பட்டால் நாளொன் றுக்கு அதிகளவிலான சடலங்களை எம்மால் எரியூட்ட முடியும்.

எங்களுக்கு எரியூட்டி வழங்கப்படாவிட்டால் கூட பரவாயில்லை. வேறு ஒரு மாயனத்துக்காவது வழங்குங் கள். ஏனெனில், யாழ்மாவட் டத்தில் கோவிட் தொற்றினால் மரணிப்பவர்களை தகனம் செய்ய தற்பொழுது ஒரேயோர் இடம்தான் உள்ளது. இப்போ துள்ள நிலைமையில் இது போதாது - என்றார்.

(அ-3)

# சாந்தசோலையில் பலருக்கு தொற்று!

வவுனியா, செப். 04

வவுனியா சாந்தசோலையில் நேற்று அன்ரிஜென் பரி சோதனை மேற்கொள்ள மறுப் புத் தெரிவித்த இரு குடும்பங் கள் உட்பட 15 குடும்பங்களைச் சேர்ந்த 60 உறுப்பினர்கள் தனிமைப்படுக்கப்பட்டுள்ளனர்.

வவுனியா சாந்தசோலை கிராமத்தில் வீடுகளில் வசிப்ப வர்களுக்கு பரவலாக காய்ச்சல் பீடித்துள்ளதாக கண்டறியப் பட்டுள்ளதை அடுத்து நொச்சி மோட்டை கிராம அலுவலர் ஊடாக சாந்தசோலை மாதர் அபிவிருத்திச்சங்கம், சனசமூக நிலையம் என்பன இணைந்து விடுக்கப்பட்ட கோரிக்கைக்கு அமைவாக சாந்தசோலை கிராம பொதுநோக்கு மண்டபத்தில் நேற்று முன்னெடுக்கப்பட்ட அன்ரிஜென் பரிசோதனையின் போது 15 குடும்பங்களைச் சேர்ந்த 60 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த பரிசோத னைக்கு ஒத்துழைக்க மறுத்த இரு குடும்பங்களுக்கு பொலிஸ ாரின் அறிவுறுத்தலையடுத்து மேற்கொள்ளப்பட்ட பரிசோத னைகளில் இரு குடும்பங்களுக் கும் தொற்று உறுதிப்படுத்தப் பட்டுள்ளது .

இதேவேளை, 65 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன . இதன் முடிவுகள் கிடைக்கும் போது தொற்று மேலும் அதிகரிக்க வாய்ப்புக்கள் காணப்படுகின்றன.

சாந்தசோலையில் ஏற் கனவே பிறந்த தின நிகழ்வில் கலந்து கொண்ட நான்கு பேர் உட்பட 25 பேருக்கு மேற்பட்ட வர்கள் தொற்று அடையாளப் படுத்தப்பட்டு தனிமைப்படுத் தப்பட்டுள்ளனர்.

(அ)

# வவுணதீவு வயல்பகுதியில் 3 கைக்குண்டுகள் மீட்பு!

மட்டக்களப்பு, செப். 04

மட்டக்களப்பு- வவுணதீவு, பாவக்கொடிச்சேனை, கற்ப கேணி வயல் பகுதியில் கைவிடப்பட்டிருந்த 3 கைக் குண்டுகளை பொலிஸார் மீட் டுள்ளனர்.

நேற்று முன் தினம் வியாழக் கிழமை) மீட்கப்பட்ட இந்த கைக்குண்டுகளை, வெடிக்க வைத்து செயலிழப்பதற்கான நடவடிக்கையை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

மேலும், குறித்த வயல்பகு தியில் விசேட அதிரடிப்படை யினருடன் இணைந்து இந்த கைக்குண்டுகள் மீட்கப்பட்ட துடன், நீதிமன்ற உத்தரவை பெற்று வெடிக்க வைக்க நட வடிக்கை முன்னெடுத்துள்ள தாக வவுணதீவு பொலிஸார் குறிப்பிட்டனர்.

சம்பவம் தொடர்பான மேல திக விசாரணைகளை வவுணதீவு பொலிஸார் மேற்கொண்டு வரு கின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை-கென்ய ஜனாதிபதிகள் தொலைபேசியில் உரையாடல்




கொழும்பு, செப். 04

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கும் கென்யா ஜனாதிபதி உஹூரு முயிகயி கென்யாட்டாவுக்கும் இடை யில், நேற்றுக் காலை, தொலை பேசி ஊடாக கலந்துரை யாடலொன்று இடம்பெற் றது.

இரு நாடுகளுக்கும் இடையி லான நட்புறவு பலமாகியுள் ளமை தொடர்பில் தங்கள் மகிழ்ச்சியைத் தெரிவித்துக் கொண்ட இரு நாடுகளின் தலைவர்களும், இவ்வொற்று மையை மேலும் பலப்படுத்திக் கொள்ள வேண்டியதன் அவசி யம் தொடர்பிலும் அவதானம் செலுத்தினர்.

கோவிட் தொற்றொழிப்பு தொடர்பில் ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ முன்னெ டுத்துள்ள நடவடிக்கைகள் மற்றும் தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டங்களின் வெற்றி தொடர்பில், கென்யா ஜனாதி பதி தமது பாராட்டுகளை, ஜனாதிபதிக்கு தெரிவித்தார்.

நாட்டின் 70 சதவீதமான மக்களுக்குத் தடுப்பூசி ஏற்றித் தொடர்ந்து முன்னெடுக்கப் பட்டு வரும் இந்த முறைமை யான வேலைத்திட்டமானது, ஏனைய நாடுகளுக்கும் எடுத் துக்காட்டாக இருக்கின்றது எனவும், கென்யா ஜனாதிபதி எடுத்துரைத்தார்.

இலங்கையில் கொவிட் தொற்றுப் பரவலைக் கட்டுப் படுத்தி, கொவிட் நோயாளிகள் மற்றும் உயிரிழப்புகளைச் சிறப்பாக முகாமைத்துவம் செய்யக்கிடைத்த போதிலும், இவ்வாண்டின் இடைப்பட்ட காலப்பகுதியில், நாட்டுக்குள் புதிய கோவிட் திரிபுகள் உரு வானதாக, ஜனாதிபதி கோட் டாபய ராஜபக்ஷ எடுத்துரைத் தார்.

வரலாற்றின் தொடக்கத்திலி ருந்தே, பல்வேறு சவால்களை எதிர்கொள்ளும் திறன் இலங் கைக்கு உள்ளதென்றும் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அவ்வாறே இந்தத் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தவும் முடியுமென்று கூறினார்.

இரு தலைவர்களும், உலகளாவிய மற்றும் பிராந்திய பிரச்சினைகள் குறித்த கருத்து களையும் பரிமாறிக்கொண் டனர்.

முன்னாள் ஜனாதிபதியும் இந்நாள் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவுடன் தாம் நெருங்கி யத் தொடர்புகளைப் பேணிய தாக எடுத்துரைத்த கென்யா ஜனாதிபதி, இரு நாட்டு மக் களின் நலனுக்காக, இலங்கை மற்றும் ஜனாதிபதி கோட்டா பய ராஜபக்ஷவுடன் நெருங்கிய தொடர்புகளைப் பேணத் தாம் எதிர்பார்ப்பதாகவும் குறிப்பிட் டார்.

கிழக்கு ஆபிரிக்காவின் மிக முக்கிய நாடாக விளங்கும் கென்யா, இலங்கையுடன் சிறந்த நட்புறவைப் பேணும் நாடாகும். இரு நாடுகளுக்கும் இடையிலான தூதரகத் தொடர்புகளின் 50 வருடப் பூர்த்தி, 2020இல் முழுமைய டைந்ததோடு, பொருளாதாரம், வர்த்தகம், முதலீடு மற்றும் அரசியல் ரீதியிலான தொடர்பு கள், இரு தரப்புக்கும் இடை யில் புதிய உயர் நிலையை எட்டியுள்ளன.

# கோதுமை விலையும் உயர்வு

கொழும்பு, செப். 04

ஒரு கிலோகிராம் கோதுமை மா 12 ரூபாயால் அதிகரிக் கப்பட்டுள்ளதாக பிறிமா நிறுவனம் அறிக்கையொன்றை விடுத்துள்ளது என நுகர்வோர் உரிமைகளை பாதுகாக்கும் தேசிய இயக்கம் அறிவித்துள் ளது.

ஒருகிலோ கிராம் கோதுமை மாவை 87 ரூபாய்க்கு விற்பனை செய்யவேண்டும். இந்நிலையி லேயே மேற்கண்டவாறு விலை அதிகரிக்கப்பட்டுள்ளது என அந்த இயக்கம் சுட்டிக்காட்டி யுள்ளது.

இந்நிலையில், அந்த விலை அதிகரிப்புக்கு கடுமையாக எதிர்ப்பை வெளியிடுவதாகவும் அந்த இயக்கம் தெரிவித்துள் ளது.

(அ)

# பைசர் கொரோனா தடுப்பூசியே சிறுவர்களுக்கு பொருத்தமானது

## அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம்



கொழும்பு, செப். 04

சிறுவர்களை கோவிட் தொற்றின் அபாயத்திலிருந்து பாதுகாப்பதற்கு பைசர் தடுப்பூசியை வழங்குவதே பொருத்தமானதாகும். இதனை உலக சுகாதார ஸ்தாபனம் உள்ளிட்ட முக்கிய சர்வதேச சுகாதார அமைப்புக்களும் சுட்டிக்காட்டியுள்ளன.

எனவே, ஒக்ரோபரில் பெற்றுக் கொள்ளப்படவுள்ள 40 இலட்சம் பைசர் தடுப்பூசிகளை 12 - 18 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர்களுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் மத்திய குழு மற்றும் ஊடகக்குழு உறுப்பினர் மருத்துவர் வாசன் ரட்ணசிங்கம் தெரிவித்தார்.

அத்துடன், நாட்டில் இது வரையில் எந்தவொரு தடுப்பூசியும் கிடைக்கப் பெறாத 60 வயதுக்கும் மேற்பட்ட 3 இலட்சம் பேர் உள்ளனர். இவர்களுக்கு தடுப்பூசி வழங்கும் பணிகளை துரிதமாக முன்னெடுப்பதன் மூலம் எதிர்வரும் காலத்தில் பதிவாகக்கூடிய மரணங்களில் 90 வீதமானவற்றை குறைக்க முடியும்.

கொழும்பிலுள்ள அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கேட்போர் கூடத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

மேலும், நாட்டில் பதிவாகும் மரணங்களில் 80 சதவீதத்திற்கும் அதிகமானவை தடுப்பூசி பெறாதவர்களே, இவர்களில் 60 வயதுக்கும் மேற்பட்டவர்களுக்கு முக்கியத்துவமளிக்கப்பட வேண்டும்.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் கிளை சங்கத்தின் ஊடாக மாவட்ட ரீதியில் எமக்கு கிடைக்கப் பெற்ற தரவுகளின் அடிப்படையில் 60 வயதுக்கு மேற்பட்டோரில் சுமார் 3 இலட்சம் பேர் எந்தவொரு தடுப்பூசியையும் பெற்றுக்கொள்ளவில்லை.

இவர்களுக்கு துரிதமாக தடுப்பூசி வழங்கும் பணிகளை முன்னெடுத்தால் எதிர்வரும் காலத்தில் பதிவாகக் கூடிய மரணங்களில் 90 வீதமானவற்றை குறைக்க முடியும். இது தொடர்பில் தொற்று நோயியல் பிரிவு உரிய அவதானத்தை செலுத்த வேண்டும் - என்றார். (ஐ)

# கோவிட் 19 தொற்று பரவலில் இலங்கை சிவப்பு வலயத்தில்!

## மருத்துவ நிபுணர் மனில்க



கொழும்பு, செப். 04

**நாட்டில் கோவிட் 19 தொற்று நிலைமையில் சிவப்பு வலயத்திலேயே இருக்கின்றது. இதிலிருந்து வெளியேறுவதற்கு நாளொன்றுக்கு இனம் காணப்படும் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை 950 வரை குறைய வேண்டும் என விசேட மருத்துவ நிபுணர் மனில்க சுமன திலக்க தெரிவித்துள்ளார்.**

கோவிட் 19 பரவலில் இலங்கை சிவப்பு வலயமாக அறிவிக்கப்பட்டிருப்பது தொடர்பில் குறிப்பிடுகையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய நிலைமையில் கோவிட் தொற்றாளர்கள் மற்றும் நாளொன்றுக்கு இனங்காணப்படும் கோவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கையை அடிப்படையாகக் கொண்டு இலங்கை சிவப்பு வலயமாக பிரகடனப் படுத்தப்பட்டிருக்கின்றது. இந்த நிலைமையில் மாற்றம் ஏற்படுவதற்கு இன்னும் ஒரு வாரகாலம் வரை செல்லும்.

அத்துடன் இந்த எச்சரிக்கையில் இருந்து மீண்டு, பச்சை வலயமாக பிரகடனப்படுத்தப் படுவதற்கு நாளொன்றுக்கு கோவிட் தொற்றாளர்கள் இனம் காணப்படும் எண்ணிக்கை 950 வரை குறைவடையவேண்டும்.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் நாட்டில் கோவிட் தொற்றாளர்கள் நாளொன்றுக்கு இனம் காணப்படும் எண்ணிக்கை 4 ஆயிரத்தை தாண்டி இருந்தது. என்றாலும் தற்போது அந்த எண்ணிக்கை குறைவடைந்து வருவதை காணக் கூடியதாக இருக்கின்றது - என்றும் சொன்னார். (ஐ)



# தமிழ் சிங்களத்தில் நீதிமன்ற தீர்ப்பு

## அமைச்சர் வாசுதேவ

கொழும்பு, செப். 04

உயர் நீதிமன்றத்தால் ஆங்கிலத்தில் மட்டுமே தீர்ப்புக்களை வெளியிடுவது பெரும்பாலும் சிக்கலுக்குரியது. அத்துடன், ஆங்கில மொழி சரியாக தெரியாத பெரும்பாலான மக்களுக்கு இது அநீதியாகும். அதனால் சிங்களம் மற்றும் தமிழ் மொழிகளில் தீர்ப்புகளை வெளியிட வேண்டும் என நீர் வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

நாட்டின் அரச கருமமொழியாக சிங்களம் மற்றும் தமிழ் மொழி சட்டமாக்கப்பட்டுள்ள நிலையில் பிரதான அரச நிறுவனங்கள் ஆங்கில மொழியில் மாத்திரம் அறிக்கைகளை விடுவது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார். (ஐ)

# கொரோனாவால் பாதிக்கப்பட்டவர் அடித்தேகொலை செய்யப்பட்டார்!

## வடமராட்சி கிழக்கில் சம்பவம்

வடமராட்சி, செப். 04

கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர் என்று கூறப்படும் நபர் ஒருவர் அடித்தே கொலை செய்யப்பட்டார் என்று மரண விசாரணையில் தெரியவந்துள்ளது. பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா இந்தத் தகவலை உறுதிப்படுத்தினார்.

வடமராட்சி கிழக்கு - மாமுனை செம்பியன்பற்றை சேர்ந்த தர்மலிங்கம் இரத்தின குலசிங்கம் (வயது -63) என்பவரே இவ்வாறு கொலையானர்.

கொரோனா தொற்றால் உயிரிழந்த மாமுனை செம்பியன்பற்றைச் சேர்ந்த தர்மலிங்கம் இரத்தினகுலசிங்கம் (வயது-63) என்பவர் அடித்தே கொலை செய்யப்பட்டிருப்பதாக பிரேத பரிசோதனையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பருத்தித்துறை மரண விசாரணை அதிகாரி சதானந்தன் சிவராசா தெரிவித்தார்.

பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் கொரோனா சிகிச்சைப் பிரிவில் கடந்த திங்கட்கிழமை உயிரிழந்தவரின் மரண விசாரணை நேற்று முன்தினம் வியாழக்கிழமை நடைபெற்றது.

விசாரணையின்போது, உயிரிழந்தவரை கடந்த 16 ஆம் திகதி அன்று அதே இடத்தை சேர்ந்த நால்வர் இரும்பு குழாயால் தாக்கினர் எனவும், இதில் படுகாயமடைந்த அவர், நோயாளர் காவு வண்டி மூலம் பருத்தித்துறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் எனவும் தெரிய வந்தது.

இந்தநிலையில் இறந்தவருக்கு மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையில் அவருக்கு கொரோனா, நிமோனியா பாதிப்பு இருந்தாலும், அவரின் மரணம் அடி காயத்தாலேயே ஏற்பட்டதாக பிரேத பரிசோதனை அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, குறித்த மரணத்துக்கு காரணமானவர்கள் எனக் கூறப்படும் நால்வரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு, நீதிமன்றத்தால் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ - 2)

### ஈஸ்டர் தாக்குதல்:

# பாதிக்கப்பட்ட மக்களுக்கு நிச்சயம் நியாயம் கிடைக்கும்

## பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர்



கொழும்பு, செப். 04

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிச்சயம் நியாயம் பெற்றுக்கொடுக்கப்படும். குற்றவாளிகள் சட்டத்தின் முன் முன்னிலைப் படுத்தப்படுவார்கள். பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த அரசாங்கம் பொறுப்புடன் செயல்பட்டுள்ளது.

இவ்வாறு, பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார்.

இலங்கையின் பொலிஸ் சேவை 155ஆவது வருடத்தை பூர்த்தி செய்ததை முன்னிட்டு ஊடகங்களுக்கு கருத்துரைக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

மேலும், பொது மக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் நோக்கில் வீதியில் சேவையில் ஈடுபடும் பொலிஸாரின் மனநிலையை பொது மக்கள் புரிந்துகொள்ள வேண்டும்.

பொலிஸார் பொறுப்புடன் செயல்பட வேண்டும். என்பதற்காக பொது மக்கள் பொறுப்பற்ற வகையில் செயல்பட முடியாது. இரு தரப்பினரும் ஒத்துழைப்புடன் செயல்பட்டால் எவ்வித பிரச்னைகளும் ஏற்படாது.

ஏப்ரல் 21 குண்டுத் தாக்குதல் சம்பவம் தொடர்பிலான விசாரணை நடவடிக்கைகளில் பொலிஸார் திறம்பட செயல் படவில்லை. என எதிர்க்கட்சியினர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

குண்டுத் தாக்குதல் சம்பவம் இடம்பெற்று இரண்டு வருட காலப்பகுதியில் பொலிஸ் திணைக்களம் சிறந்த முறையில் செயற்பட்டுள்ளது பல சாட்சியங்களை திரட்டியுள்ளது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாக சந்தேகிக்கப்படும் 32 பேருக்கு எதிராக 9 வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. அத்துடன், 25 பேருக்கு எதிராக குற்றப்பத்திரம் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. விசாரணை நடவடிக்கைகளுக்காக மூவர் அடங்கிய நீதியரசர் குழாம் நியமிக்கப்பட்டுள்ளது.

இவையனைத்தும் பொலிஸாரின் துரித செயல்பாடுகளாலேயே சாத்தியமானது. ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிச்சயம் நியாயம் வழங்கப்படும். குற்றவாளிகள் சட்டத்தின் முன் நிச்சயம் நிறுத்தப்படுவார்கள் - என்றார். (ஐ)

# இராணுவம் என்றால் என்ன என்பதை இனி சிங்கள மக்கள் அறிந்துகொள்வர்!

## விக்னேஸ்வரன் எம்.பி. அறிக்கை

யாழ்ப்பாணம், செப். 04

"தமக்கெதிராக மக்கள் கிளர்ந்தெழ ஆயத்தமாகின்றார்கள் என்பதை அறிந்து கொண்டு அவர்களை அடக்கியாள அவசர காலச் சட்டத்தை உபயோகித்துள்ளார். இது சர்வாதிகாரத்திற்கு முக்கிய படி என்பதில் எந்தவித ஐயமும் இருக்க முடியாது. இராணுவம் என்றால் என்ன என்பதை இனி சிங்கள மக்கள் அறிந்து கொள்வார்கள்"

இவ்வாறு வடக்கு மாகாண முன்னாள் முதலமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான க.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் ஊடகங்களுக்கு அனுப்பிவைத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டவை வருமாறு,

"2243/1 அதிசிறப்பு அரசிதழ் மூலம் கோவிட் - 19ஐக் காரணம் காட்டி அவசரகால நிலைமையை ஜனாதிபதி அறிவித்துள்ளார். உண்மையில் இவ்வாறான சந்தர்ப்பத்தில் நடைமுறைப்படுத்த வேண்டிய சட்டம் இடர் முகாமைத்துவச் சட்டம். அதன் கீழ் ஒரு செயலணியை நிறுவி மருத்துவ ஆலோசனைகளுக்கேற்ப நடவடிக்கை எடுக்க வேண்டும். இதிலிருந்து ஜனாதிபதி ஆரம்பத்திலேயே தவறிவிட்டார். பல குற்றங்களை அவர் புரிந்துள்ளார்.

இவ்வாறான இடர் முகாமைத்துவ செயலணியை இது வரையில் நியமிக்காமை. கோவிட்-19இற்கு எதிரான நடவடிக்கைகளை துறைசார் வல்லுநர்களை வைத்து இதுவரையில் கட்டுப்படுத்தாதது.

ஆயுதமேந்தி மக்களைக் கொல்லும் இராணுவத்தை கோவிட்டைக் கட்டுப்படுத்த நியமித்தமை. கோவிட்டைக் காரணம் காட்டி அவசரகால நிலையை ஏற்படுத்தி சர்வதிகாரத்திற்கு வித்திட்டமை.

ஏற்கனவே பயங்கரவாதத் தடைச் சட்டம் நடைமுறையில் உள்ளது. அடுத்து கோவிட்-19 ஐக் கட்டுப்படுத்த இராணுவத்தை அழைத்து அவர்கள் எங்கும் வியாபித்திருக்கின்றார்கள்.

மூன்றாவதாக அவசரகாலச் சட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வந்துள்ளார். - என்றுள்ளது. (ஐ)

# தலிபான்களை மூர்க்கமாக எதிர்க்கும் அடிபணியாத ‘சிங்க படை’



தலிபான்கள் யாரும் எதிர்பாராத மின்னல் வேகத்தில் ஆப்கானிஸ்தானின் பல முக்கியமான பகுதிகளை கைப்பற்றினர்.

ஆனால், அவர்கள் காபூலில் இருந்து புதிய அரசு அமைப்பதைப் பற்றி திட்டமிட்டுக் கொண்டிருக்கும்போது, அந்த நகருக்கு அருகிலேயே அவர்களுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் இருக்கிறது. காபூலுக்கு வடகிழக்கே தலிபான்களை எதிர்க்கும் ஒரு சிறிய பள்ளத்தாக்கு பகுதி விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை. அந்தப் பள்ளத்தாக்கின் பெயர் பஞ்ஷிர்.

பஞ்ஷிர் பகுதியில் வசிப்பவர்கள் தங்களது ஆயுதங்களைக் கைவிடும்படி தலிபான் இயக்கத்தின் மூத்த தலைவர் அமீர் கான் மோடாக்கி கேட்டுக் கொண்டுள்ளார். ஆனால், பஞ்ஷிர் மக்கள் அடிபணிவதற்கான அறிகுறிகள் ஏதும் தென்படவில்லை.



அஹ்மத் மசூத்

ஒகஸ்ட் 15ஆம் திகதி காபூலைக் கைப்பற்றிய பிறகு பஞ்ஷிரை நோக்கி தலிபான்கள் குறிவைத்து போரிட்டு வருகின்றனர். ஆனால், அவர்களுக்கு இதுவரை எந்த வெற்றியும் கிடைக்கவில்லை. மாறாக தலிபான்களில் ஏராளமானோர் கொல்லப்பட்டனர்.

**தலிபான்களை எதிர்க்கும் போராளிகள் யார்?**

கிழக்கு ஆப்கானிஸ்தானில் உள்ள பஞ்ஷிர் பள்ளத்தாக்கு தேசிய எதிர்ப்பு முன்னணியின் (NRF) இருப்பிடம். இந்த அமைப்பு பல இனக்குழுக்கள் மற்றும் முன்னாள் ஆப்கானிஸ்தான் பாதுகாப்பு படை வீரர்களைக் கொண்டது. இந்த வாரம் இவர்கள் தொடர்பான பல புகைப்படங்கள் வெளியாகின. கடுமையான பயிற்சியும், ஆயுதங்களையும் பெற்றவர்களாக இவர்கள் தோன்றுகிறார்கள்.

NRF உடன் ஆப்கானிஸ்தானின் முன்னாள் துணை அதிபர் அம்ருல்லா சலேஹ் இணைந்திருக்கிறார். குழுவின் தலைவராக இருப்பவர் அஹ்மத் மசூத். இவரது தந்தை பஞ்ஷிரின் சிங்கம் என்று அழைக்கப்படும் அஹ்மத் ஷா மசூத். 1980 களில் சோவியத் படையெடுப்புக்கு எதிராகப் போரிட்டது மட்டுமல்லாமல், 1990 களில் தலிபான்களையும் தடுத்து நிறுத்தினார். செப்ரெம்பர் 11 தாக்குதலுக்கு இரு நாள்களுக்கு முன்பு நடந்த ஒரு தாக்குதலில் அவர் கொல்லப் பட்டார்.

அவரது மகன் அஹ்மத் மசூத் 32 வயதானவர். லண்டன் கிங்ஸ் கல்லூரி மற்றும் சாண்ட்ஹர்ஸ்ட் இராணுவக் கல்லூரி ஆகியவற்றில் பயின்றவர். தந்தையைப் போலவே தலிபான்களை தங்களது இடத்துக்குள் வரவிடாமல் விரட்டியடித்துக் கொண்டிருக்கிறார். அதில் தொடர்ந்து உறுதியாகவும் இருக்கிறார்.

அவர் உள்நாட்டில் மட்டும் ஆதரவைத் தேடிக் கொண்டிருக்கவில்லை. இந்த ஆண்டின் தொடக்கத்தில் பிரான்ஸ் நாட்டு அதிபர் இம்மானுவேல் மக்ரோனை அவர் சந்தித்துப் பேசினார். அமெரிக்கா ஆப்கானிஸ்தானை விட்டு விலகிச் செல்லும் முயற்சியில் ஈடுபட்டிருந்ததால், புதிய நட்பு நாடுகளைச் சேர்க்கும் நடவடிக்கைகளில் அவர் ஈடுபட்டிருந்தார்.

தலிபான்கள் சற்றும் மாறவில்லை என்று சி.என்.என். தொலைக்காட்சிக்கு அளித்த பேட்டியில் மசூத் தெரிவித்தார். “இன மற்றும் பாலின பேதமின்றி அனைத்து மக்களின் ஜனநாயக உரிமைகளும், சுதந்திரமும் காக்கப்பட வேண்டும்” என்று அவர் வலியுறுத்தினார்.

**தலிபான்களுக்கு என்ன வேண்டும்?**

அனைத்து ஆப்கானியர்களுக்குமான இஸ்லாமிய இராஜ்ஜியத்தை கட்டமைப்ப தற்கு தலிபான்கள் முயற்சி செய்து வருகின்றனர். ஆனால், காபூலின் நுழைவு வாயிலாக இருக்கும் பஞ்ஷிர் பள்ளத் தாக்கு இதற்குத் தடையாக இருக்கிறது. சமூக வலைத்தளங்களிலும் பஞ்ஷிர் பள்ளத்தாக்கில் உள்ள தலிபான் எதிர்ப் புப் போராளிகளுக்கு ஆதரவு தென்படத் தொடங்கியிருக்கிறது.

பஞ்ஷிரில் உள்ள என்.ஆர்.எஃப். போராளிகளுடன் தலிபான்கள் பேச்சு நடத்தி வருகின்ற னர். போரைத் தவிர்க்க வேண் டும் என்பதில் ஆர்வமாக இருப்ப தாக இரு தரப்பினரும் கூறுகின்ற னர்.

> **காபூலில் இருந்து புதிய அரசு அமைப்பதைப் பற்றி தலிபான்கள் திட்டமிட்டுக் கொண்டிருக்கும்போது, அந்த நகருக்கு அருகிலேயே அவர்களுக்கு மிகப்பெரிய அச்சுறுத்தல் இருக்கிறது. காபூலுக்கு வடகிழக்கே தலிபான்களை எதிர்க்கும் ஒரு சிறிய பள்ளத்தாக்கு பகுதி விட்டுக் கொடுக்கத் தயாராக இல்லை.**

ஆனால், இதுவரையிலும் பேச்சுவார்த்தைகளில் எந்த முன்னேற்றமும் ஏற்படவில்லை. சமரசத்துக்குப் பதிலாக வெளிப்படையான சண டைக்கே இந்தப் பேச்சு வழிவகுத்திருப்பதாகத் தெரிகிறது.

பஞ்ஷிரைக் கைப்பற்றுவதற்காக நூற்றுக்கணக்கான போராளிகளை அனுப்பியதாக தலிபான் கூறுகிறது. ஆனால் எதற்கும் தயாராக இருக்கிறது பஞ்ஷிர். பள்ளத்தாக்கின் விளிம்புப் பகுதிக்குச் செல்லும் தலிபான் போராளிகள், துப்பாக்கிக் குண்டுகளாலும், எறிகணைகளாலும் வரவேற்கப்படுகிறார்கள். எல்லைப் பகுதியில் மணல் மூட்டைகள், இயந்திரத் துப்பாக்கிகள், எறிகணைகள், கண்காணிப்புக் கோபுரங்கள் என பஞ்ஷிர் முழுமையாகத் தயாராக இருப்பதாக ஏ.எவ்.பி. செய்தி நிறுவனம் கூறுகிறது.

இதுவரை நடந்திருக்கும் சண்டையில் உயிரிழப்பை ஏற்படுத்தியிருப்பதாக இரு தரப்பினருமே கூறுகிறார்கள். ஆனால் உண்மையான எண்ணிக்கையைக் கண்டு பிடிப்பது மிகவும் கடினம். சில பகுதிகளைக் கைப்பற்றிவிட்டதாக தலிபான்கள் கூறியிருப்பதை என் ஆர்எஃப் மறுத்திருக்கிறது.

பஞ்ஷிர் பள்ளத்தாக்குக்கு அத்தியாவசியப் பொருள்கள் செல்லும் வழிகளை அடைப்பதற்கு தலிபான்கள் முயற்சி செய்து வருகின்றனர். இதன் மூலம் எதிர்ப்பைக் கைவிட பஞ்ஷிர் பள்ளத்தாக்கை நிர்ப்பந்திக்கலாம் என தலிபான்கள் கருதுகின்றனர்.

**பஞ்ஷிர் பள்ளத்தாக்கு எப்படி இருக்கும்?**

பஞ்ஷிர் என்பது ஆப்கானிஸ்தானின் மிகச்சிறிய மாகாணங்களில் ஒன்று. பஞ்ஷிர் ஆற்றின் மேலே 9,800 அடி உயரமுள்ள மலை சிகரங்களுக்கு நடுவே அமைந்திருக்கிறது. இங்கு 1.5 இலட்சம் முதல் 2 இலட்சம் மக்கள் வசிப்பதாக மதிப்பிடப்படுகிறது. சண்டையில்லாத அமைதியான ஆண்டுகளில் இந்தப் பகுதியின் மக்கள் வியத்தகு இயற்கை காட்சிகளைக் காண்பதற்காக ஏராளமான மக்கள் இங்கு வந்தார்கள்.

இது பல்வேறு இனங்களைச் சேர்ந்த மக்கள் வாழும் இடம். தஜிக் இனத்தவர் இவர்களில் பெரும்பான்மையினர். வெளியே இருந்து வருவோரை எதிர்த்துப் போராரிடும் துணிச்சலுக்காக இந் தப் பள்ளத்தாக்கு மக்கள் புகழ்பெற்றவர்கள்.

சுரங்கங்கள், விலையுயர்ந்த கற்கள் ஆகியவற்றுக்காகப் பெயர்பெற்றது இந்தப் பள்ளத்தாக்கு. கடந்த சில ஆண்டுகளில் வெளி முதலீடுகளால் நன்மை கிடைத்தது. கடந்த இருபது ஆண்டுகளில் நீர்மின் திட்டத்துக்கான அணைகள், சாலைகள், காற்றாலைகள், வானொலிக் கோபுரம் ஆகியவை இங்கு அமைக்கப்பட்டிருக்கின்றன.

பி.பி.சி.



# நியூசிலாந்தை அலைக்கழிக்கும் டெல்டா

■நியூசிலாந்து சிற்சபேசன்

**“டெல்டா வேகமாகப் பரவுகின்றது. தொற்று ஏற்பட்டவருக்கு அருகாமையில், கணப்பொழுதில் கடந்துசென்ற மற்றொருவருக்கு தொற்று ஏற்படுகின்ற சாத்தியக் கூறுகள் அதிகம் என்று சொல்லப்படுகின்றது. அஃது கட்டிடங்களுக்கு உள்ளே மட்டுமே நடைபெற்று விடுவதில்லை. காற்றோட்ட மான இடங்களிலும் நடைபெறலாமென்று சொல்லப்படுகின்றது.**




நியூசிலாந்தில் பொதுமுடக்கம் ஏற்பட்டு இரண்டு வாரங்கள் கழிந்து விட்டன. ஒருவருக்குத் தொற்று ஏற்பட்ட தகவல் உறுதியாகிய சொற்ப நேரத்திலேயே தேசம் முழுவதுமாக முடக்கப்பட்டது. தேசத்தின் மொத்த நிலப்பரப்பு ஒருலட்சம் சதுர மைல்களாகும். இரண்டு பெரிய தீவுகளிலே ஐந்து மில்லியன் மக்கள் வாழ்கின்றனர். முதலாவது கொரோனாத் தொற்று 2020 பெப்ரவரியிலே அடையாளமாகியது. அதன் பின்னரான கடந்த பதினெட்டு மாதங்களில் நான்கு பொது முடக்கங்களைத் தேசம் சந்தித்திருக்கின்றது. நூற்றுச்சொச்சம் நாட்களைப் பொதுமுடக்கத்திலே கழித்திருக்கின்றது. 2021 பெப்ரவரிக்குப் பின்னரான கடந்த ஆறுமாதங்களில் சமூகப்பரவல் இருக்கவில்லை. அதனால் இயல்பு வாழ்க்கை பெருமளவில் திரும்பியிருந்தது.

ஒகஸ்ட் 17ல் டெல்டா தொற்று அடையாளமாகியது. உடனடியாகவே பொது முடக்கம் அறிவிக்கப்பட்டது. அப்போது ஒருவருக்கு மட்டுமே தொற்று அடையாளமாகியிருந்தது. ஆனால், சமூகப் பரவல் ஏற்பட்டிருக்கலாம் என்பது அறிவியல் ரீதியாகக் கணிக்கப்பட்டது. அன்றைய தினத்திலே ஆகக்குறைந்தது நூறு வரையானோர் தொற்று அடையாளமாகாமல் இருப்பார்கள் என்பதாகவே சொல்லப்பட்டது. கடந்த இரண்டு வாரங்களில் அதிகரித்த தொற்று எண்ணிக்கை அதனையே உறுதிப்படுத்துகின்றது. துரிதமாக அறிவிக்கப்படுகின்ற பொது முடக்கமே, சமூகப்பரவலின் அதிகரிப்பு விகிதத்தை கட்டுப்படுத்தும் என்பதை துறைசார் வல்லுனர் சொல்கின்றனர். இன்னுமொருவகையில் சொல்வதனால், துரிதமாக ஆரம்பிக்கப்படுகின்ற இறுக்கமான பொதுமுடக்கமே பயனளிக்கின்றது. அதற்கு நியூசிலாந்து அனுபவம் சாட்சியாகின்றது.

நியூசிலாந்தின் கொரோனா தொடர்பான அணுகுமுறை, இரண்டு படிநிலைகளைக் கொண்டதாகும். ஒன்று, (நாடு திரும்புகின்ற) சர்வதேச வருகையாளரை இரண்டுவாரக் கட்டாயத் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்துவதன் மூலமாக, தொற்று தேசத்தினுள் நுழைவதைத் தடுப்பதாகும். மற்றையது, சமூகப்பரவல் ஏற்படுகின்ற பட்சத்தில் அதனை துரிதமாகக் கட்டுப்படுத்துவதாகும்.

சமூகப்பரவல் ஏற்படுகின்றபட்சத்தில், காண்டக்ட்டிரேசிங் மூலமாக தொற்றாளர்களை அடையாளம் காண்பதற்கான இடைவெளியே பொதுமுடக்கம் மூலமாக ஏற்படுத்தப்படுகின்றது. அதன்பொருட்டே, துரிதமானதும் இறுக்கமானதுமான பொதுமுடக்கம் பயன்படுகின்றது. அத்தகைய அணுகுமுறை மூலமாகவே கொரோனாப் பேரிடரை நியூசிலாந்து கையாள்கின்றது.

ஒகஸ்ட் 17ல் ஆரம்பமாகிய டெல்டா தொற்றின் பரவல் வேகம் அதிகமாகவுள்ளது. டெல்டாவின் பரவல் வேகத்துக்கு ஈடுகொடுத்து, தொற்றாளர்களை அடையாளம் காண்பதில் நியூசிலாந்து சவால்களை எதிர்கொள்கின்றது. அந்தவகையிலேயும்கூட, துரிதமாக அறிவிக்கப்பட்ட பொதுமுடக்கம் பயனளிக்கின்றது. பொது மக்கள் நடமாட்டம் பெருமளவில் நிறுத்தப்பட்டிருக்கின்றது. அதனால் புதிதாகத் தொற்று ஏற்படுவதற்கான நிகழ்த்தகவு குறைகின்றது. தொற்றுக்குள்ளானோர் தனிமைப்படுத்தப்படுகின்றனர். தொற்றை அடையாளம் காண்பதற்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் அதிகப்படுத்தப்படுகின்றன. இருந்தபோதிலும், தொற்று அடையாளப்பட்டவர்களின் வசிப்பிடங்களிலே கண்ணிமைக்கும் வேகத்தில் தொற்று பரவிவிடுகின்றது. சூப்பர் மார்கெட் போன்ற அத்தியாவசியசேவை வழங்கும் இடங்கள் மூலமாகவும் தொற்றுப்பரவல் ஏற்படுகின்றமை கவனத்திற்கு வந்திருக்கின்றது. அஃது, எவ்வாறு ஏற்படுகின்றதென்பது தற்போது துரிதமாக ஆராயப்படுகின்றது.

டெல்டா தொற்றைக்கட்டுக்குள் கொண்டுவருவதற்கு உலகின் பல்வேறு நாடுகளும் திணறுகின்றன. அதற்கு நியூசிலாந்தும் விதிவிலக்கல்ல. டெல்டா வேகமாகப் பரவுகின்றது. தொற்று ஏற்பட்டவருக்கு அருகாமையில், கணப்பொழுதில் கடந்துசென்ற மற்றொருவருக்கு தொற்று ஏற்படுகின்ற சாத்தியக்கூறுகள் அதிகம் என்று சொல்லப்படுகின்றது. அஃது கட்டிடங்களுக்கு உள்ளே மட்டுமே நடைபெற்றுவிடுவதில்லை. காற்றோட்டமான இடங்களிலும் நடைபெறலாமென்று சொல்லப்படுகின்றது.




அந்தவகையிலே, கொரோனாத் தொற்றின் ஆரம்பங்களில் பயன்படுத்திய சமூக இடைவெளி என்னும் மந்திரம் அதிகம் பலனளிப்பதாகத் தெரியவில்லை. இரண்டு மீட்டர் இடைவெளி என்பது டெல்டாவின் முன்னால் பழங்கதையாகி விட்டதோ என்னும் கேள்வியும் எழுகின்றது.

இன்று உலகெங்கிலும் தொற்றுக்கு எதிரான கைகண்ட உபாயமாக முகக்கவசம் பயன்படுகின்றது. ஆனால், தற்போது பாவனையிலுள்ள சாதாரண முகக்கவசம் டெல்டாவுக்கு எதிரான கவசமல்ல என்னும் கருத்தையும் துறைசார் வல்லுனர்கள் முன்வைக்கின்றனர். மருத்துவத் தரத்திலான என்95 போன்ற முகக்கவசத்தின் பயன்பாடே பயனுள்ளதென்னும் கருத்தும் முன்வைக்கப்படுகின்றது. இத்தகைய புதிய சூழ்நிலைகளிலே, டெல்டா பரவலைத் தடுப்பதென்பது கடல் அலைக்கு எதிராக நீந்துவதற்கு ஒப்பானதாகும்.

கொரோனாத் தொற்று தொடர்பில் நியூசிலாந்தின் எலிமினேஷன் (தொற்றை இல்லா தொழிக்கின்ற) இலக்கு, ஒன்றுடனொன்று தொடர்புடைய இரண்டு நோக்கங்களைக் கொண்டதாகும். ஒன்று, மக்களைத் தொற்றிலிருந்து பாதுகாப்பதாகும். மற்றையது, மருத்துவமனைகளுக்கு ஏற்படக்கூடிய சுமைகளைத் தவிர்ப்பதாகும்.

தொற்றாளர்கள் அதிகரிக்கின்ற பட்சத்தில், சிகிச்சை அளிப்பதற்கு தேவையான பௌதிக மற்றும் ஆளணி வளங்களில் கடுமையான பற்றாக்குறை ஏற்படலாம் என்னும் அச்சம் காணப்படுகின்றது. அதுவே, நியூசிலாந்து அரசின் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளில் முக்கியமாகப் பிரதிபலிக்கின்றது. கொரோனாத்தொற்று உச்சம் தொட்டவேளையில், இத்தாலி உள்ளிட்ட பல்வேறு ஐரோப்பியநாடுகளிலே தீவிரசிகிச்சைவளங்களிலே ஏற்பட்ட தட்டுப்பாடும், ஒட்சிசனுக்காக இந்தியா போன்ற தேசங்கள் திணறியதும் வரலாற்றுப் படிப்பினைகளாகும். அதனை நியூசிலாந்து எப்போதுமே கவனத்தில் கொண்டிருக்கின்றது. அதனாலேயே, சமூகப் பரவலைக் கட்டுப்படுத்துவதில் தொடர்ந்தும் தீவிர அக்கறை கொண்டிருக்கின்றது.

ஒவ்வொருதடவை பொது முடக்கம் ஏற்படுகின்றபோதும் பாரிய பாதிப்புக்கள் ஏற்படுகின்றன. அதிலே, பொருளாதாரப் பாதிப்புக்கள் கனதியானவையாகும். தேசத்தின் எல்லைகள் மூடப்பட்டுள்ளன. அதனால், சுற்றுலா, கல்வி உள்ளிட்ட பல்வேறு துறைகளும் சவால்களை எதிர்கொள்கின்றன. வருடமொன்றுக்கு சுற்றுலா பயணிகளின் வருகை ஐந்து மில்லியன் வரையானதாகும். வெளிநாட்டு மாணவர்களின் வருகை அண்ணளவாக இரண்டு இலட்சமாகும். எல்லைகளை தொடர்ச்சியாக மூடிவைத்திருப்பதனால் சர்வதேச வருகையாளரை தேசம் இழந்திருக்கின்றது. அந்தவகையிலேயும்கூட, பொருளாதர மீள்நிர்மாணம் சவால்களை எதிர்கொள்கின்றது.

ஆனாலும், கொரோனாப் பேரிடரிலிருந்து மக்களைப் பாதுகாப்பதற்காக குறுகியகால இழப்புக்களை சந்திக்க அரசு துணிகின்றது. அஃது, தேசத்தின் எதிர்காலத்திற்கான மூலதனமாகக் கருதப்படுகின்றது. சுவர் இருந்தால்தானே சித்திரம் வரையலாம் என்பதிலே நியூசிலாந்து அசையாத நம்பிக்கை கொண்டிருக்கின்றது. ■

# புலமைச் சிகரம் தரம் 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி

மாதிரிப் பரீட்சை
விடைகள்

கல்வி tv CHANNEL

## முன்னோடி வினாத்தாள் 1 - I

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1. (2) | 2. (1) | 3. (2) | 4. (3) | 5. (2) | 6. (3) | 7. (3) |
| 8. (3) | 9. (1) | 10. (3) | 11. (1) | 12. (3) | 13. (3) | 14. (3) |
| 15. (3) | 16. (2) | 17. (3) | 18. (1) | 19. (2) | 20. (1) | 21. (3) |
| 22. (3) | 23. (2) | 24. (3) | 25. (3) | 26. (2) | 27. (2) | 28. (2) |
| 29. (1) | 30. (3) | 31. (2) | 32. (3) | 33. (2) | 34. (3) | 35. (2) |
| 36. (3) | 37. (2) | 38. (3) | 39. (2) | 40. (2) | | |

## முன்னோடி வினாத்தாள் 1 - II

1. (i) பறவைகள் *(1 புள்ளி)*
 (ii) நீரருந்துவதற்காக *(1 புள்ளி)*
 (iii) தெளித்து விட்ட வண்ணக் கலவை போல *(1 புள்ளி)*
 (iv) வனப்பு *(1 புள்ளி)*
 (v) இயற்கை *(1 புள்ளி)*
 (vi) குளிர்காற்று *(1 புள்ளி)*

2. (i) உளவு *(1 புள்ளி)*
 (ii) சிவப்பு *(1 புள்ளி)*

3. (2) ஓடுகின்றன *(1 புள்ளி)*

4. உணவு உண்ட பின்னர் சிறிது தூரம் உலவுவது உடம்புக்கு நல்லது. *(1 புள்ளி)*

5. (i) கூவியது *(1 புள்ளி)*
 (ii) அசைந்தன *(1 புள்ளி)*
 (iii) துன்பப்படுவர் *(1 புள்ளி)*
 (iv) மிகுந்தது *(1 புள்ளி)*

6. (i) "அறம்செய விரும்பு" என்றார் ஔவைப் பாட்டி. *(1 புள்ளி)*
 (ii) போட்டியில் முதலிடம் பெற்றவர் யார்? *(1 புள்ளி)*

7. (i) அடிமேல் அடி அடித்தால் அம்மியும் நகரும் *(1 புள்ளி)*
 (ii) ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு *(1 புள்ளி)*

8. பறவைகள் கூடு நோக்கிப் பறந்தன. *(1 புள்ளி)*

9. இடப்பற்றாக்குறை *(1 புள்ளி)*

10. (i) அரிசி *(1 புள்ளி)*
 (ii) சோறு *(1 புள்ளி)*

11. (i) பூக்கள் *(1 புள்ளி)*
 (ii) கண்கள் *(1 புள்ளி)*

12. (i) Umbrella / UMBRELLA / umbrella *(1 புள்ளி)*
 (ii) Elephant / ELEPHANT / elephant *(1 புள்ளி)*

13. (i) I am very happy *(1 புள்ளி)*
 (ii) I like to play cricket *(1 புள்ளி)*

14. நண்பி *(1 புள்ளி)*

15. கிரி பொன்ன *(1 புள்ளி)*

16. 6023 *(2 புள்ளிகள்)*

17. 17001 *(2 புள்ளிகள்)*

18. 400 *(2 புள்ளிகள்)*

19. 6, 250 *(2 புள்ளிகள்)*

20. 6, 650 *(2 புள்ளிகள்)*

21. (i) 129 *(1 புள்ளி)*
 (ii) 80 *(1 புள்ளி)*

22. 13:20 *(2 புள்ளிகள்)*

23. (பொருத்தமாக நிழற்றியிருப்பின் புள்ளி வழங்குக.) *(2 புள்ளிகள்)*

24. 27 *(2 புள்ளிகள்)*

25. (i) 2 / இரண்டு *(1 புள்ளி)*
 (ii) 2 / இரண்டு *(1 புள்ளி)*

26. 6 *(2 புள்ளிகள்)*

27. (i) 635 *(2 புள்ளிகள்)*
 (ii) 105 *(2 புள்ளிகள்)*

28. 207 *(2 புள்ளிகள்)*

29. (i) தோசை *(1 புள்ளி)*
 (ii) கடலை, இடியப்பம் *(1 புள்ளி)*
 (iii) 45 *(2 புள்ளிகள்)*

| | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| 30. (3) | 31. (1) | 32. (1) | 33. (2) | 34. (2) | 35. (1) | 36. (3) | 37. (3) | 38. (2) | 39. (2) |
| 40. (3) | 41. (1) | 42. (1) | 43. (2) | 44. (3) | 45. (1) | 46. (2) | 47. (3) | 48. (1) | 49. (3) |
| 50. (1) | 51. (1) | 52. (1) | 53. (3) | 54. (3) | 55. (1) | 56. (2) | 57. (3) | 58. (3) | 59. (1) |

*(30 புள்ளிகள்)*

60. பொருத்தமான வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக. காலைப் பொழுது எவ்வாறு அழகானது என்னும் வினாவுக்கு விடையாக அமையும் வாக்கியங்களுக்குப் புள்ளி வழங்குக. வாக்கியமொன்றில் ஓர் எழுத்துப் பிழை இருப்பின் அவ்வாக்கியத்திற்கு 1 புள்ளி மாத்திரம் வழங்குக. ஒன்றுக்கு மேற்பட்ட பிழைகள் இருப்பின் அவ்வாக்கியத்திற்குப் புள்ளி வழங்க வேண்டாம். *(6 புள்ளிகள்)*

முழுவிடைத்தாளையும் கருத்திற்கொண்டு தெளிவான எழுத்து, நேர்த்தி என்பவற்றிற்கு போனஸாக **2 புள்ளிகள்** வழங்குக.

# பகிரங்க விவாதத்துக்கு வாருங்கள்!

## அமைச்சரவை உப குழுவுக்கு ஆசிரியர் சங்கம் சவால்

கொழும்பு, செப். 04

"அதிபர் - ஆசிரியர் சேவை களில் காணப்படும் சம்பளப் பிரச்னைகளுக்குத் தீர்வை முன்வைப்பதற்காக நியமிக்கப் பட்ட அமைச்சரவை உப குழு, பிழையான தகவல்களை வெளி யிட்டு மக்களைக் குழப்புவதற்கு முற்படுகின்றது. எனவே, உண்மை நிலவரம் தொடர் பில் கலந்துரையாடுவதற்காகப் பகிரங்க விவாதத்துக்கு வரு மாறு உப குழுவுக்கு சவால் விடுக்கின்றோம்."

- இவ்வாறு இலங்கை ஆசி ரியர் சேவை சங்கத்தின் பொதுச் செலாளர் மஹிந்த ஜயசிங்க ஊடகங்களிடம் தெரிவித்தார்.

அமைச்சர்களான விமல் வீரவன்ச, மஹிந்த அமரவீர ஆகியோரால் நடத்தப்பட்ட ஊடகவியலாளர் மாநாட்டின் போது முன்வைக்கப்பட்ட கருத் துகளுக்குப் பதிலடி கொடுக் கும் வகையிலேயே அவர் இவ்வாறு சவால் விடுத்தார்.

இது தொடர்பில் மஹிந்த ஜயசிங்க மேலும் கூறிய தாவது: -

"அமைச்சர்களான விமல் வீரவன்ச, மஹிந்த அமரவீர ஆகியோர் மக்களைத் திசை திருப்பும் வகையில் கருத்துக் களை வெளியிட்டுள்ளனர். மூடி மறைக்காமல் உண்மை யைக் கூறுமாறு வலியுறுத்து கின்றோம். 40 ஆயிரம் ரூபாய் 50 ஆயிரமாக அதிகரிக்கின்றது என்றெல்லாம் அறிவித்தனர். எனவே, உண்மையாகவே எவ் வளவு சம்பளம், எப்படி அதிக ரிக்கப்படும் என்பதை அவர்கள் குறிப்பிடவில்லை.

அமைச்சரவைத் தீர்மானம் தொடர்பில் அதிபர் - ஆசிரியர் தொழிற்சங்கங்களுடன் கலந்து ரையாடப்படவில்லை. எனவே, மக்கள் மத்தியில் பிழையான கருத்து பரப்பப்படுவதை நாம் கடுமையாக எதிர்க்கின்றோம்.

நாம் முழு இறாத்தல் இறைச் சியையும் கேட்பதாக அமைச்



சர்கள் கூறுகின்றனர். ஆனால் ஓர் இறாத்தல் இறைச்சியை நான்காகப் பிரித்து அதில் ஒரு பங்கை வழங்குவதற்கே முற்ப டுகின்றனர். கணக்கு தொடர் பில் அவர்களுக்கு உள்ள தெளிவு என்னவென்பது மக்களுக்குத் தெரியும். எனவே, பகிரங்க விவாதத்துக்கு வருமாறு சவால் விடுக்கின்றோம்.

சுபோதினி அறிக்கையின் பிரகாரம் ஒரே தடவையில் நியாயமான தீர்வைக் கோரி னோம். நாம் முழு இறாத்தல் இறைச்சியைக் கேட்கவில்லை. அமைச்சர்கள்தான் பொய்யு ரைக்கின்றனர். 2018 இல் முன் வைக்கப்பட்ட அறிக்கையைத் திருத்தமின்றி முன்வைத்துள்ள னர்" - என்றார். (இ)

# 28 பொலிஸ் அதிகாரிகள் கொரோனாவால் மரணம்

## 11,700 பேருக்கு தொற்று

கொழும்பு, செப். 04

நாட்டில் இதுவரை 28 பொலிஸ் அதிகாரிகள் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகி உயிரிழந்துள்ளனர் என்று பொதுமக்கள் பாது காப்பு அமைச்சர் சரத் வீரசேகர தெரிவித்தார். இதேவேளை, இதுவரை 11 ஆயிரத்து 700 பொலிஸ் அதிகாரிகள் கொரோனாத் தொற் றுக்கு உள்ளாகி உள்ளனர் என்றும் அவர் மேலும் கூறினார். (இ)

# மருத்துவர் முன் வீழ்ந்து உயிரிழந்த இளைஞன்!

## பரிசோதனையில் கொரோனா உறுதி

கண்டி, செப். 04

கொரோனா வைரஸ் தொற் றுக்கு உள்ளான 25 வயது இளை ஞன் மருத்துவருக்கு முன்பாக விழுந்து உயிரிழந்த சம்பவம் கண்டியில் இடம்பெற்றுள்ளது.

கண்டி, குண்டசாலை - மஹமெவ்னா என்ற பிரதேசத் தில் உள்ள கொரோனா சிகிச்சை நிலையத்துக்கு இடுப்பு வலி காரணமாக பரிசோதனை செய்துகொள்ளச் சென்ற இளை ஞன், மருத்துவருக்கு முன்பா கவே விழுந்து உயிரிழந்துள் ளார்.

இதனைத் தொடர்ந்து உயி ரிழந்த இளைஞனுக்கு மேற்கொள் ளப்பட்ட பரிசோதனையில், அவருக்குக் கொரோனாத் தொற்று இருந்தமை உறுதி செய்யப்பட்டுள்ளது. குறித்த இளைஞன் கண்டி - கட்டுகஸ் தோட்டையைச் சேர்ந்தவர் என் பது குறிப்பிடத்தக்கது. (இ)



# யாழில் மின்னல் தாக்கி மரணமடைந்தவரின் குடும்பத்துக்கு ஒரு இலட்சம் ரூபா நிதி உதவி

யாழ்ப்பாணம், செப். 04

யாழ்., அச்சுவேலியில் இடி மின்னல் தாக்கி மரணமடைந்த வரின் குடும்பத்துக்கு தியாகி அறக் கொடை நிறுவுநர் நிவாரணமாக ஒரு இலட்சம் ரூபா வழங்கினார்.

அச்சுவேலியில் தனது விவ சாய நிலத்தில் நேற்றுமுன்தினம் உழவு நடவடிக்கையில் ஈடுபட் டிருந்த மூன்று பிள்ளைகளின் தந்தை மின்னல் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.

இந்நிலையில், உயிரிழந்த குடும்பஸ்தரின் வீட்டுக்கு உடனடியாகச் சென்ற தியாகி அறக்கொடை நிறுவுநர், பாதிக் கப்பட்ட குடும்பத்தினருக்கு ஆறுதல் கூறியதுடன் ஒரு இலட்சம் ரூபாவை நிவாரண மாகவும் வழங்கினார்.

அத்துடன் பிள்ளைகளின் கல்வி நடவடிக்கைகளுக்குத் தான் உதவி செய்வதாகவும் அவர் உறுதியளித்தார். (இ - 03)

# ஜனாதிபதியை சந்திக்க சஜித் அணியினர் திட்டம்

## அனுமதி கோரி அனுப்பப்படவுள்ளது கடிதம்

**கொழும்பு, செப்.04**

**ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவை சந்தித்துப் பேச்சு நடத்துவதற்கு பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தீர்மானித்துள்ளது. இது தொடர்பில் ஜனாதிபதிக்குக் கடிதமும் அனுப்பப்படவுள்ளது.**



கொரோனா நெருக்கடி நிலைமையைச் சமாளிப்பது பற் றியும், அதற்குத் தேவையான நடவடிக்கைகளை முன்னெடுப் பது சம்பந்தமாகவும் ஆராய்வ தற்கு சர்வகட்சிக் கூட்டத்தை கூட்டி, சர்வகட்சிப் பொறி முறை ஊடாக தேசிய வேலைத் திட்டத்தை முன்னெடுக்குமாறு ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்திருந்தது.

எனினும், ஜனாதிபதி தரப் பில் இருந்து அதற்கு உரிய பதில் வழங்கப்படவில்லை. இந்நிலையிலேயே சந்திப்புக் கான நேரம் கோரி கடிதம் அனுப்பப்படவுள்ளது.

இதற்கு முன்னர் அதாவது கொரோனாவின் இரண்டாவது அலையின்போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மற்றும் ஐக்கிய மக்கள் சக்தி யின் பொதுச்செயலாளர் ரஞ் சித் மத்தும பண்டார ஆகி யோர் ஜனாதிபதியைச் சந்தித்து பேச்சு நடத்தியிருந்தனர் என் பது குறிப்பிடத்தக்கது.

அதன்பின்னர் சந்திப்பு தொடரவில்லை. இந்நிலையி லேயே மீண்டும் பேச்சைத் தொடர்வதற்குத் திட்டமிடப் பட்டுள்ளது. (இ)

# மலையக கல்வி முன்னேற்றம் தொடர்பில் தமிழக கல்வி அமைச்சருடன் ஜீவன் பேச்சு

நுவரெலியா, செப். 04

தென்னிந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்ட மான், தமிழகத்தின் கல்வி அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழியை சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.

இதன்போது இலங்கையில் மலையகத்துக்கான தனியான பல்கலைக்கழகம் அமைக்கப் படவுள்ளமை தொடர்பாகவும், மலையகத்தின் கல்வி அபிவி ருத்திகள் தொடர்பாகவும் விரி வாகக் கலந்துரையாடியுள் ளதாக இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் தெரி வித்துள்ளார்.

அத்தோடு மலையகத்தில் அமையவுள்ள பல்கலைக்கழகத் துக்கும், தமிழ்நாட்டின் அரசுக் கும் இடையே சுமுகமான கல்விசார் உறவை வளர்த்துக் கொள்வது தொடர்பாக ஆராயப்பட்டது எனவும், மலையகத்தின் கல்விச் செயல்பாடுக ளின் தற்போதைய நிலைமை தொடர் பாகவும் இருவருக்கும் இடையில் கலந்தாலோ சிக்கப்பட்டது எனவும் ஜீவன் தொண்டமான் குறிப்பிட்டுள்ளார்.

அத்தோடு இலங்கை யின் மலையகச் சமூகத் தின் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளில் தமிழ் நாட்டு அரசின் ஒத்துழைப்பானது தொடர்ச்சியாகக் கிடைக்கும் பட்சத்தில் மலையகச் சமூகத்தின் கல்வி முறை மேலும் வளர்ச்சியடையும் எனக் கலந்துரையாடப்பட்டது எனவும் அவர் கூறியுள்ளார்.

இந்தச் சந்திப்பின் மூலம்



இந்திய அரசு மற்றும் தமிழ் நாட்டின் அரசின் ஊடாக பல்வேறு கல்விசார் அபிவி ருத்திகள் இலங்கையின் மலை யக மாணவர்களுக்கும் வந்த டையும் என நம்பிக்கை ஏற் பட்டுள்ளது எனவும் இரா ஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான் மேலும் தெரி வித்துள்ளார். (இ)

# நாற்பது இலட்சம் சினோபார்ம் நாட்டுக்கு இன்று வருகின்றன

## ஒரே தடவையில் அதிகளவு தடுப்பூசிகள்

கொழும்பு, செப். 04

சீனாவின் தயாரிப்பிலான 40 இலட்சம் சினோபார்ம் தடுப் பூசிகள் இன்று இலங்கைக்குக் கொண்டுவரப்படவுள்ளன.

இலங்கையிலுள்ள சீனத் தூத ரகம் தமது உத் தியோகபூர்வ ருவிட்டர் தளத் தில் இந்தத் தகவ லைப் பதிவிட் டுள்ளது.

ஒரே நாளில் அதிகூடிய சினோபார்ம் தடுப்பூசிகள் நாட் டுக்குக் கிடைக்கும் முதல் சந்தர்ப் பம் இதுவாகும்.

குறித்த 40 இலட்சம் சினோ பார்ம் தடுப்பூசிகளுடன் சீனாவி லிருந்து இலங்கைக்குக் கொண் டுவரப்பட்டுள்ள தடுப்பூசிக ளின் எண்ணிக்கை 2 கோடி 20 இலட்சமாக அதிகரிக்கும் என்பது குறிப்பிடத்தக்கது. (இ)



# ‘ஐடா’ சூறாவளி, வெள்ளத்தால் அமெரிக்காவில் 46 பேர் பலி!



நியூயோர்க், செப். 04

அமெரிக்காவின் நியூயோர்க், நியூ ஜெர்சி மற்றும் பென்சில்வேனியா ஆகிய மாநிலங்களில் ‘ஐடா’ சூறாவளியின் தாக்கத்தால் உண்டான பலத்த மழை வீழ்ச்சி மற்றும் திடீர் வெள்ளப்பெருக்கால் குறைந்தது 46 பேர் உயிரிழந்தனர் என்று அதிகாரிகள் உறுதிபடுத்தியுள்ளனர்.

இவற்றில் நியூயோர்க் நகரம் மற்றும் புறநகர் வெஸ்ட்செஸ்டர் பகுதியில் வெள்ள நீரில் சிக்கி 16 பேர் வரை உயிரிழந்தனர் மாநில அதிகாரிகள் கூறுகின்றனர்.

நியூஜெர்சியில் குறைந்தது 23 பேர் பலியாகினர் என்று மாநில ஆளுநர் பில் மர்பி கூறினார்.

பென்சில்வேனியாவில் குறைந்தது ஐந்து உயிரிழப்புகளும், கனெக்டிகட் மற்றும் மேரிலாந்தில் தலா ஒவ்வொரு உயிரிழப்புகளும் பதிவாகியுள்ளதாக அதிகாரிகள் உறுதிப்படுத்தியுள்ளனர்.

ஐடா சூறாவளியால் ஏற்பட்ட பலத்த மழை காரணமாக பல வீதிகளும், வாகனங்களும், குடியிருப்புகளும், நகரின் பெரும்பலான சுரங்கப்பாதை அமைப்புகளும் வெள்ளத்தில் மூழ்கிப்போயின.

இந் நிலையில் இது தொடர்பில் வெள்ளை மாளிகையில் பேசிய அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன், நியூ ஜெர்சி மற்றும் நியூயோர்க் மற்றும் பாதிக்கப்பட்ட ஏனைய மாநிலங்களின் ஆளுநர்களுக்கு அவசர உதவி அளிப்பதாக தெரிவித்தார். அத்துடன் உயிரிழந்தவர்களின் குடும்பங்களுக்கு இரங்கலும் ஆறுதலும் கூறினார். (ஐ)



# கொலம்பியா வைரஸிக்கு புதிய கிரேக்கப் பெயர் ‘மூ’

ஜெனிவா, செப். 04

தென் அமெரிக்க நாடான கொலம்பியாவில் கடந்த ஜனவரியில் முதன் முதல் அறியப்பட்ட கொரோனா வைரஸ் திரிபு க்கு ‘மூ’ (Mu) என்ற பெயரிடப்பட்டிருக்கிறது. அயல் நாடுகளிலும் ஐரோப்பா உட்பட வேறு சில நாடுகளிலும் பரவியுள்ள அதன் குணவியல்புகள் தொடர்ந்து அவதானிக்கப்பட்டு வருவதாக உலக சுகாதார நிறுவனத்தின் நிலவர அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

B.1.621 என்னும் அறிவியல் பெயர் கொண்ட கொலம்பியா திரிபு (‘Colombian variant’) இனிமேல் ‘மூ’ என்று அழைக்கப்படும்.”மூ” என்பது கிரேக்க இலக்கங்களில் (Greek alphabet) பன்னிரெண்டை குறிக்கும். தென்னாபிரிக்காவில் கண்டறியப்பட்ட ‘பேற்றா’ (Beta) திரிபைப் போன்று ‘மூ’ வைரஸும் தடுப்பூசிகளை எதிர்க்கின்ற சக்திமிக்கதாக இருக்கலாம்

என்பது பூர்வாங்கப் பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது.

2019 இல் சீனாவில் தோன்றிய கொரோனா வைரஸ் தொடர்ந்து பல மரபு மாற்றங்களை எடுத்து புதிய தன்மைகளுடன் பரவி வருவது தெரிந்ததே. அவற்றில் இந்தியாவில் கண்டறியப்பட்ட டெல்டா திரிபு உலகெங்கும் புதிதாகத் தொற்று நெருக்கடியை ஏற்படுத்தி உள்ளது.

கொரோனா என்கின்ற தாய் வைரஸில் இருந்து பல நூற்றுக் கணக்கான வைரஸ் திரிபுகள் உருவாகிவந்தாலும் அவற்றில் சில மாத்திரமே தொற்றும் திறன் கூடிய வையாகவும் உடலின் நோய் எதிர்ப்புச் சக்தியால் கட்டுப்படுத்த முடியாதவையாகவும் காணப்படுகின்றன.

அத்தகைய ஆபத்தான திரிபுகளுக்கு உலக சுகாதார நிறுவனம் கிரேக்க மொழியில் பெயர்களைச் சூட்டி வருகிறது. இலகுவாக அடையாளம் காண்பதற்காகவும் நாடுகளின் பெயர்களைக் கூறி அழைப்பதால் உருவாகின்ற விரும்பத்தகாத விளைவுகளைத் தவிர்க்கவும் கிரேக்க இலக்கங்களின் பெயர்கள் திரிபுகளுக்குச் சூட்டப்படுகின்றன.

பெல்ஜியத்தில் மூதாளர் காப்பகம் ஒன்றில் தங்கியிருந்த வயோதிபர்கள் ஏழு பேர் அண்மையில் ‘மூ’ என்கின்ற கொலம்பியா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி உயிரிழந்தனர். அவர்கள் அனைவரும் இரண்டு தடுப்பூசிகளையும் ஏற்றியவர்கள் ஆவர். அமெரிக்கா, மெக்ஸிக்கோ இத்தாலி, பிரான்ஸ், நெதர்லாந்து, பெல்ஜியம், இங்கிலாந்து போன்ற நாடுகளில் மரபு மாறிய ‘மூ’ வைரஸ் தொற்றாளர்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளனர். (ஐ)

# காதலுக்காக சொத்துக்களை உதறினார் ஜப்பான் இளவரசி!

ரோக்கியோ, செப். 04

காதலுக்காக அரச குடும்பத்தின் சொத்தை விட்டுக் கொடுத்த ஜப்பான் நாட்டு இளவரசி மகோ, பாரம்பரிய விழாக்கள் இல்லாமல் சாதாரண நபரைப்போல் திருமணம் செய்துகொள்ளவிருக்கிறார்.

ஜப்பான் பேரசர் நருஹிட்டோ. இவரின் மருமகள் மகோ. இவர் அரச குடும்பத்தைச் சாராத கெய் கொமுரோ என்பவரைக் காதலித்து வந்தார். அரசக் குடும்பத்தின் பெண்கள் சாதாரண நபர்களைத் திருமணம் செய்துகொள்ள தடை உள்ளது. இதனால் கடந்த பல ஆண்டுகளாகவே இவர்களின் திருமணத்துக்கு முட்டுக்கட்டை நிலவுகிறது.

இந்நிலையில், இந்த இணை பாரம்பரிய முறையில் இல்லாமல், வழக்கமான கொண்டாட்டங்களைத் தவிர்த்து சாதாரண மக்களை போல திருமணம் செய்து கொள்ள முடிவு செய்துள்ளனர்.

29 வயதான மகோ திருமணம் செய்தபின்னர் இளவரசி என்ற பட்டத்தை இழந்துவிடுவார். திருமணத்துக்குப் பின்னர் மகோ தனது கணவருடன் அமெரிக்காவுக்கு குடிபெயரவிருக்கிறார்.

ஆனால், கொமுரோவை இன்னும் ஜப்பான் ராஜ குடும்பம் விசாரணைக்கு உரிய நபராகவே கருதுகிறது. கொமுரோவின் முன்னாள் காதலியிடம் அவரின் தாயார் கடன் வாங்கிய விவகாரம் தொடர்பாக விசாரித்து வருகிறது. இதனால், கொமுரோ தனது மீதான தவறான



பிம்பம் விழுவதைத் தவிர்க்க அமெரிக்கா சென்றுவிட்டார்.

அங்கு சட்டம் பயின்றுவந்தார். மகோவின் தந்தை அகிஷினோ அண்மையில் திருமணத்தை தான் ஆதரிப்பதாகவும் ஆனால், மகோ பொதுமக்களின் அங்கீகாரத்தைப் பெற வேண்டும் என்று கூறியிருந்தார். ஆனால், மகோ பல ஆண்டுகள் காத்திருப்புக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் காதலுக்காக அரச குடும்பத்தின் சொத்தை விட்டுக்கொடுத்துள்ளார்.

அவர் விட்டுக்கொடுத்த தொகை 137 மில்லியன் யென் - சுமார் 24 கோடி இலங்கை ரூபாய் எனக் கூறப்படுகிறது. (ஐ)

# ஆப்கான் அரசாங்கத்துக்கு முல்லா தலைமை தாங்குவார்!



காபூல், செப். 04

தலிபான்களின் அரசியல் அலுவலகத்தின் தலைவர் முல்லா பரதர் ஆப்கானிஸ்தானில் புதிய அரசாங்கத்தை வழிநடத்துவார் என்று இஸ்லாமியக் குழுவில் குறைந் தது மூன்று ஆதாரங்கள் வெள்ளிக்கிழமை தெரிவித்தன.

மறைந்த தலிபான் நிறுவுநர் முல்லா உமரின் புதல்வர் முல்லா மொஹமட் யாகூப் மற்றும் ஷேர் மொஹமட் அப்பாஸ் ஸ்டானெக்ஸாய் ஆகியோர் அரசாங்கத்தில் உயர் பதவிகளை வகிப்பார்கள்.

இந்த அறிவிப்புகள் விரைவில் உத்தியோகபூர்வமாக வெளியிடப்படவுள்ளன. தலிபான்களின் அனைத்து முன்னணி தலைவர்களும் காபூலுக்கு வந்துவிட்டனர், அங்கு புதிய அரசாங்கத்தை அறிவிப்பதற்கான இறுதி கட்ட நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாக சர்வதேச வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (ஐ)

# இரத்ததானம் பெற்றமையால் 8 மாத குழந்தைக்கு எய்ட்ஸ்!

புதுடில்லி, செப். 04

இரத்த தானம் பெற்ற 8 மாத குழந்தைக்கு எச்.ஐ.வி. வைரஸ் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. அதிர்ச்சி தரும் இந்த சம்பவம் குறித்து விசாரணைக்கு உத்தரவிட் டுள்ளது.

மும்பையில் அகோலா மாவட்டத்தை சேர்ந்த 8 மாத பெண் குழந்தைக்கு எச்.ஐ.வி. தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது. விசாரணையில், சமீபத்தில் அவர் இரத்த தானம் பெற்றதில் அந்த குழந்தைக்கு இந்த நோய் பாதிப்பு ஏற்பட்டிருப்பதாக தெரியவந்துள்ளது.

இதுபற்றி மேலும் தெரிய வருவதாவது,

குழந்தை அண்மையில் நோய் வாய்ப்பட்டதை அடுத்து செய்யப்பட்ட பரிசோதனையில், குழந்தைக்கு இரத்தத்தில் வெள்ளை அணுக்களின் எண்ணிக்கை மிகவும் குறைவாக இருந்தது தெரியவந்தது. இதையடுத்து உள்ளூர் மருத்துவரின் அறிவுறுத்தலின் பேரில் அகோலாவில் உள்ள இரத்த வங்கியில் இருந்து அவளுக்கு இரத்தம் வழங்கப்பட்டது. இதனை குழந்தைக்கு செலுத்தியதும் அவள் குணமடைந்தாள். ஆனால் பின்னர் அவள் அடிக்கடி நோய்வாய்பட ஆரம்பித்தாள்.

இதைதொடர்ந்து குழந்தையை அமராவதியில் உள்ள ஒரு வைத்தியசாலைக்கு அழைத்து சென்றனர். அங்கு நடத்திய பரிசோதனையில் அவளுக்கு எச்.ஐ.வி. வைரஸ் பாதிப்பு இருப்பதுஉறுதியானது. இதைதொடர்ந்து குழந்தைக்கு நோய் பாதிப்பு எப்படி வந்தது என கண்டறிய பெற்றோருக்கு சோதனை மேற்கொள்ளப்பட்டது. ஆனால், அவர்களுக்கு நோய் பாதிப்பு இல்லை. எனவே இரத்தம் ஏற்றியதன் மூலம் குழந்தைக்கு எச்.ஐ.வி. வந்தது தெரியவந்துள்ளது.

அதிர்ச்சி அளிக்கும் இந்த சம்பவம் குறித்து அரசு விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)



## இந்தியாவுடனான டெஸ்ட்:
# இங்கிலாந்து நிதானம்!

லண்டன், செப். 04

விராட் கோலி, தாகூர் ஆகியோரின் பொறுப்பான ஆட்டத்தால் இந்தியா ஓரளவு ஓட்டங்களை பெற்றாலும் 191 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்களையும் இழந்தது. எனினும், இங்கிலாந்து அணி தடுமாற்றத்தை வெளிப்படுத்தினாலும் இரண்டாம் நாளான நேற்று நிதானமான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகின்றது.

இங்கிலாந்து - இந்திய அணிகள் மோதும் நான்காவது டெஸ்ட் போட்டி நேற்றுமுன்தினம் லண்டன் ஓவல் மைதானத்தில் ஆரம்பமானது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபட்டது. இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

மதியபோசனத்துக்காக ஆட்டம் நிறுத்தப்பட்ட போதே 54 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்து இந்தியா தடுமாறியது. எனினும் அணித் தலைவர் கோலி நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். எனினும் மறு முனையில் விக்கெட்கள் வீழ்ந்தன.

அரைச்சதத்தை தொட்ட விராட் கோலி ஆட்டமிழந்ததை தொடர்ந்து, மேலும் தடுமாறிய இந்திய அணியை தாகூர் தாங்கிப் பிடித்தார். எனினும் அவருக்கு துணையாக வீரர்கள் எவரும் நிலைக்கவில்லை.

இறுதியில் 61.3 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி சகல விக்கெட்களையும் இழந்து 191 ஓட்டங்களைப் பெற்றது.

இங்கிலாந்தின் பந்துவீச்சில் கிறிஸ் வோக்ஸ் 4 விக்கெட்களையும், ரொபின்சன் 3 விக்கெட்களையும் வீழ்த்தினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து அணியும் தொடக்கத்தில் தடுமாறியது. ஆரம்பம் கொடுத்த பேர்ண்ஸ் 5, ஹமீட் 0 என்ற ஆட்டமிழக்க, நம்பிக்கை கொடுப்பார் என்று எதிர்பார்க்கப்பட்ட அணித் தலைவர் ரூட்டும் 21 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

முதல்நாள் ஆட்டம் முடிவடைந்தபோது 53 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்களை இழந்திருந்தது இங்கிலாந்து அணி.

நேற்று இரண்டாம் நாள்ஆட்டத்தில் தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய அணிக்கு டேவிட் மலன் 31, ஓவர்ரன் ஓர் ஓட்டத்துடன் ஆட்டமிழந்தனர்.

எனினும், ஒல்லி போப், பெயர்ஸ்ரோ ஆகியோர் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினர். நேற்று மதிய போசனத்துக்காக ஆட்டம் இடைநிறுத்தப்பட்டபோது இங்கிலாந்து அணி 5 விக்கெட்கள் இழப்புக்க 139 ஓட்டங்களை எடுத்திருந்தது. போப் 38, பெயர்ஸ்ரோ 34 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ஐ)

# இரு கைகளை இழந்த வீரர் 4 தங்கப்பதக்கம் வென்றார்!

ரோக்கியோ, செப். 04

இரு கைகளையும் இழந்த சீன வீரர் ஜெங் தாவோ பரா ஒலிம்பிக்கின் நீச்சல் போட்டிகளில் 4 தங்கப் பதக்கங்களை வென்று சாதனை படைத்துள்ளார்.

2020ஆம் ஆண்டுக்கான பரா ஒலிம்பிக் போட்டி ஜப்பான் தலைநகர் ரோக்கியோவில் நடக்கின்றது. இதில், புதன்கிழமை நடந்த 50 மீற்றர் ஃப்ரீ ஸ்ரைல் நீச்சல் இறுதிப் போட்டியில் அவர் நிகழ்த்திய பாராலிம்பிக் போட்டி அளவிலான சாதனையை படைத்தார். இதன் போது அவர் சீன நாட்டுக்கான 500ஆவது தங்கப் பதக்கத்தை வென்றார்.



சாதனையின் பின்னர் அவர் தனது மகளுக்காக காணொலி ஒன்றை வெளியிட்டார். அதில், ”என்னைப் பார் மகளே, கைகள் இல்லாவிட்டாலும் என்னால் வேகமாக நீந்த முடிகிறது!” என தெரிவித்துள்ளார்.

ஜெங் ஒவ்வொரு நாளும் 10 கி.மீ. தூரம் நீந்தினார் என்று கூறப்படுகின்றது. 13 வயதில் விளையாட்டுப் போட்டிக்கு வந்த அவர், 19 வயதில் முதன்முதலாக சர்வதேச நீச்சல் போட்டி ஒன்றில் பங்கேற்றார். அது நெதர்லாந்தில் நடந்த உலக சம்பியன்ஷிப் போட்டி ஆகும்.

அவருக்கு முதல் பரா ஒலிம்பிக் தங்கப் பதக்கம் 2012ஆம் ஆண்டு கிடைத்தது. லண்டனில் நடந்த அந்தப் போட்டியில் 100 மீற்றர் பேக்ஸ்ட்ரோக் பிரிவில் அவர் தங்கம் வென்றார். ஜெங் தாவோ இதுவரை 9 பரா ஒலிம்பிக் பதக்கங்களை வென்றுள்ளார். (ஐ)



# தென்னாபிரிகாவின் தலைவராக மகராஜ்

கேப்டவுன், செப். 04

தென்னாபிரிக்க அணியின் தலைவராக கேஷவ் மகராஜ் நியமிக்கப்பட்டுள்ளார்.

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி இலங்கையில் 3 ஒருநாள் போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடி வருகின்றது.

இந்த நிலையில், நேற்று முன்தினம் நடந்த முதலாவது ஒருநாள் போட்டியில் துடுப்பெடுத்தாடிய அந்த அணியின் தலைவர் டெம்பா பவுமாவுக்கு வலது கையின் பெருவிரல் பந்து பட்டதால் முறிவடைந்தது.

இதனால், ஏனைய இரு ஒருநாள் போட்டிகளுக்கும் கேஷவ் மகராஜ் அணித் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார். (ஐ)

# தென்னாபிரிக்காவை வீழ்த்தியது இலங்கை!

கொழும்பு, செப். 04

தென்னாபிரிக்க அணிக்கெதிரான முதல் ஒருநாள் போட்டியில் இலங்கை அணி 14 ஓட்டங்களால் வெற்றி பெற்று, 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1-0 என முன்னிலை பெற்றுள்ளது.

இலங்கைக்கு கிரிக்கெட் சுற்றுப்பயணம் வந்துள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி 3 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் பங்கேற்று விளையாடி வருகின்றது.

முதல் ஒருநாள் போட்டி கொழும்பு ஆர். பிரேமதாஸ மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இதில், நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற இலங்கை அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட்களை இழந்து 300 ஓட்டங்களை எடுத்தது. அவிஷ்க பெர்னாண்டோ 118 ஓட்டங்களையும், சரித் அசலன்க 72 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணியின் கேஷவ் மகராஜ் 30 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்களை கைப்பற்றினார்.

301 ஓட்டங்கள் என்ற வெற்றி இலக்கை நோக்கி துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை இழந்து 286 ஓட்டங்களை பெற்று 14 ஓட்டங்களால் தோல்வியை தழுவியது. எய்டன் மக்ரம் 96 ஓட்டங்களை அதிகபட்சமாகப் பெற்றுக்கொடுத்தார்.

இலங்கையின் பந்துவீச்சில் அகில தனஞ்சய 65 ஓட்டங்களைக் கொடுத்து 2 விக்கெட்களை கைப்பற்றினார்.

போட்டியின் நாயகனாக அவிஷ்க பெர்னாண்டோ தெரிவானார்.

இந்த வெற்றியின் மூலம் 3 போட்டிகள் கொண்ட தொடரில் இலங்கை அணி 1- 0 என்ற கணக்கில் முன்னிலையிலுள்ளது. (ஐ)






# அமெரிக்க ஓப்பன் ஜொகோவிச் வெற்றி

நியூயோர்க், செப். 04

முதல்நிலை வீரரான ஜொகோவிச் அமெரிக்க ஓப்பனில் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார்.

கிராண்ட்ஸ்லம் போட்டிகளில் ஒன்றான அமெரிக்க ஓப்பன் ரென்னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடைபெற்று வருகிறது.

ஆண்கள் ஒற்றையர் பிரிவில் நடந்த இரண்டாவது சுற்று ஆட்டம் ஒன்றில் முதல் நிலை வீரரான சேர்பியாவின் நோவக் ஜொகோவிச்சும், நெதர்லாந்தை சேர்ந்த டாலன் கிரீக்ஸ்பூரும் மோதினார்கள்.

ஆரம்பம் முதலே ஜொகோவிச் சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். முதல் செற்றை 6-2, இரண்டாவது செற்றை 6-3, மூன்றாவது செற்றை 6-2 என கைப்பற்றி அசத்தினார். இதன் மூலம் மூன்றாவது சுற்றுக்கு முன்னேறினார். (ஐ)

# சட்டவிரோதமாக பதுக்கி வைத்திருந்த பல்லாயிரக்கணக்கான நெல் மூடைகள்

அம்பாறை, செப். 04

அம்பாறை மாவட்டத்தில் சட்டவிரோதமாக நெல்லைப் பதுக்கி வைத்திருந்த இடங்கள் மற்றும் மேலதிகமாகச் சேமித்து வைத்திருந்த இடங்களில் சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப் பட்டன.

அக்கரைப்பற்று பொத்து வில் வீதியில் உள்ள நெற்களஞ் சியசாலை ஒன்றும் நேற்றுமுன் தினம் மாலை இவ்வாறு சுற்றி வளைக்கப்பட்டதுடன், குறித்த களஞ்சிய சாலையில் சேமித்து வைக்கப்பட்டிருந்த சுமார் 5 இலட்சத்து 85 ஆயிரம் கிலோ கிராம் நிறையுடைய 9 ஆயிரம் நெல் மூடைகள் மீட்கப்பட்டன.

இதேவேளை, இலங்கை நுகர்வோர் அதிகார சபையின ரால் அட்டாளைச்சேனை, அக்கரைப்பற்று மற்றும் ஒலு வில் பிரதேசங்களில் உள்ள அரிசி ஆலைகள், வர்த்தக நிலை யங்கள் மீது திடீர் சுற்றிவளைப்



புகள் மேற்கொள்ளப்பட்டன.

களஞ்சியத்தில் உள்ள பல ஆயிரம் நெல் மூடைகளை நெல் சந்தைப்படுத்தல் சபைக்கு வழங்குவதற்கு இதன்போது ஒப்புதல் வழங்கப்பட்டது.

இலங்கை நுகர்வோர் சபை யின் தலைவர் ஓய்வுபெற்ற மேஜர் ஜெனரல் சாந்த திஸா நாயக்க தலைமையிலான ஜனா திபதியின் அத்தியாவசிய சேவைகள் ஆணையாளர் நிபுன் கெல்ல, நுகர்வோர் அதிகார சபையின் பணிப்பாளர் நாயகம் சாந்தகோட்டகே மற்றும் நுகர் வோர் சபை உயர் அதிகாரிகள், அம்பாறை மாவட்ட நுகர்வோர் அதிகார சபையின் மாவட்ட பொறுப்பதிகாரி சாலின்ட பண் டார நவரத்ன, விசேட அதிர டிப் படையினர், பொலிஸார் ஆகியோர் இணைந்து இந்தச் சுற்றிவளைப்புகளை மேற் கொண்டனர். (இ)

# தடுப்பூசி செலுத்தாத இரு தாய்மார் மரணம்

கொழும்பு, செப். 04

கொரோனாத் தடுப்பூசி எது வும் பெறாத மூன்று குழந்தைக ளின் தாய் மற்றும் இரண்டு குழந் தைகளின் தாய் ஆகியோர் தமது வீடுகளில் உயிரிழந் துள்ளனர்.

கராப்பிட்டிய வைத்திய சாலையில் நடைபெற்ற பிரேத பரிசோதனையில், அவர்கள் கொரோனாவின் உச்சத்தால் ஏற்பட்ட நிமோனியாவால் இறந்தமை தெரியவந்துள்ளது.

உயிரிழந்தவர்கள் யக்கல முல்லவைச் சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள் ளனர். (இ)

# போதைப்பொருள் வர்த்தகர் நேற்று சுட்டுப் படுகொலை!

கொழும்பு, செப். 04

பிரபல போதைப்பொருள் வர்த்தகராகக் கருதப்படும் 'சன் ஷைன் சுத்தா' எனப்படும் அமில பிரசன்ன ஹெட்டி ஹேவா துப்பாக்கிச்சூட்டில் உயிரிழந்தார் என்று பொலிஸ ார் தெரிவித்துள்ளனர்.

மாத்தறை, வரக்காபிட்டிய பிரதேசத்தில் வைத்து இவர் நேற்று சுட்டுக் கொல்லப்பட் டார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

உயிரிழந்த நபர் மாகந்துரே மதூஷுக்கு மிகவும் நெருக்க மான உதவியாளராகச் செயல் பட்டு வந்திருந்த ஒருவர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் பொலிஸார் மேலதிக விசார ணைகளை முன்னெடுத்துள் ளனர். (இ)

# ஸ்ரீலங்கா சுதந்திர கட்சி என்ற ஆலமரத்தை வெட்டவே முடியாது

## சந்திரிகா திட்டவட்டம்

கொழும்பு, செப். 04

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி என்ற ஆலமரம் வேரோடு வெட்டப்பட்டாலும் மீண்டும் அது உறுதியாக கட்டியெழுப் பப்படும் என்று முன்னாள் ஜனா திபதி சந்திரிகா பண்டார நாயக்க குமாரதுங்க தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி யின் 70 வது ஆண்டு விழாவை யொட்டி அவரது 'பேஸ்புக்' கில் வெளியிட்டுள்ள விசேட காணொலி ஒன்றின் ஊடாக இதனைக் கூறினார்.

அதில் அவர் மேலும் குறிப் பிடுகையில்,

"ஆலமரம் பிறக்கும்போது நான் உயிரோடு இருப்பேனா என்பது தெரியாது. மரத்திற்கு



வலிமை தரும் ஓர் இளம் தலை முறையை உருவாக்க உதவுகின் றேன்.


ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை முற்றிலுமாக அழிக்க முடியாது. வலுவான அடித் தளம் மற்றும் தூய்மையான பார்வை கொண்ட ஒருசில பெரிய மனிதர்களின் இரத்தத் தால் குறிக்கப்பட்ட வர லாறு கொண்ட ஒரு கட் சியை அழிக்க முடியாது" - என்றார்.(இ)

# கொரோனா உயிரிழப்புகளை உடன் கட்டுப்படுத்த முடியாது!

## சகல தரப்பினரும் தடுப்பூசிகளை ஏற்ற வேண்டும் என்கிறார் சவேந்திர

கொழும்பு, செப்.04

**கொரோனா மரணங்களைத் தம்மால் உடனடியாகக் கட்டுப்படுத்த முடியாது என்று கொரோனாத் தடுப் புக்கான தேசிய செயல்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.**



அதேவேளை, தொற்றா ளர்களின் எண்ணிக்கையை மறைக்கும் நோக்கும் தமக்குக் கிடையாது என்றும் அவர் குறிப்பிட்டார்.

நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களைக் கொரோனா தாக்கினால் அவர் கள் தொற்றிலிருந்து தப்புவது கடினம் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

நாட்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்களும் 65 வயதுக்கு மேற்பட்டவர்களுமே கொரோனாவால் அதிகம் உயிரிழக்கின்றனர் என்றும் அவர் குறிப்பிட்டார்.

எனினும், சகல தரப்பினரும் தடுப்பூசிகளைப் பெற வேண் டும் என்றும் அவர் வலியுறுத் தினார். (இ)

# இரு முகக்கவசங்களை கட்டாயம் அணியுங்கள்

## இராஜாங்க அமைச்சர் சுதர்ஷினி கோரிக்கை

கொழும்பு, செப். 04

நாட்டில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவி வரு கின்றமையால் கட்டாயம் இரண்டு முகக்கவசங்களை அணியுமாறு நாட்டு மக்களிடம் கேட்டுக்கொள்வதாக இராஜாங்க அமைச்சர் சுதர் ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

அத்துடன், வீட்டை விட்டு வெளியே செல்லும்போது 'பேஸ் பீல்ட்' முகக்கவசம் கட் டாயமானது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதனிடையே, வீட்டுக்கு அருகாமையில் உள்ள தடுப்பூசி செலுத்தும் சிகிச்சை நிலையத் துக்கு சென்று அங்கு வழங்கப் படுகின்ற தடுப்பூசியை உடன டியாக பெற்றுக் கொள்ளுமாறு பொதுமக்களை கேட்டுக்கொள் வதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை, ஒருசிலர்



வெளிநாடுகளுக்குச் செல்வ தற்கு ஒவ்வொரு வகையான தடுப்பூசிகளைத் தேடிக் கொண்டு இருக்கின்றனர் எனச் சுட்டிக்காட்டிய அவர், வெளி நாட்டுக்குச் செல்ல முன் யாரு டைய உயிருக்காவது உத்தர வாதம் கொடுக்க முடியுமா எனவும் கேள்வி எழுப்பினார்.

ஆகவே, கொரோனாவிலி ருந்து தமது உயிர்களைப் பாது காத்துக்கொள்வது அவரவரது பொறுப்பாகும் எனக் குறிப் பிட்ட அவர், மற்றவர்கள் முடி வெடுக்கும் வரை பார்த்துக் கொண்டிருக்காமல் சுகாதார வழிமுறைகளை உரிய முறை யில் பின்பற்றி நடக்கும்படியும் அவர் கேட்டுக்கொண்டார்.

அதுமாத்திரமன்றி, இந்தக் காலப்பகுதியில் அனைவரும் முடிந்தளவு வீடுகளில் இருப் பதுதான் பாதுகாப்பானது எனத் தெரிவித்த அவர், கொரோனாவைக் கட்டுப்படுத் துவதற்கு தனிமைப்படுத்தலில் இருப்பது மிகவும் முக்கியமா னது எனவும் சுட்டிக்கட்டினார்.

எனவே, கொரோனாவிலிருந்து பாது காப்பைப் பெற சுகாதார அமைச்சின் ஐந்து முக்கியமான சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றுமாறும் அவர் பொது மக்களிடம் கோரிக்கை விடுத் தார். (இ)

# தனிமைப்படுத்தல் விதிகளை மீறிய மேலும் 577 பேர் கைது!

கொழும்பு, செப். 04

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிகளை மீறிய மேலும் 577 பேர் கைதுசெய்யப்பட்டுள் ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

இதற்கமைய, தனிமைப் படுத்தல் சட்டவிதிகளை மீறிய குற்றச்சாட்டில் இதுவரையில் 63 ஆயிரத்து 908 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதேவேளை, நேற்றுமுன் தினம் மேல் மாகாணத்துக்குள் நுழையும் மற்றும் அங்கிருந்து வெளியேறும் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ள 13 சோத னைச் சாவடிகளில் 994 வாக னங்களில் பயணித்த 1,796 நபர் கள் சோதனைக்கு உட்படுத்தப் பட்டனர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது. (இ)

# தென்மராட்சியில் கொரோனாவுக்கு 80 வயது மூதாட்டி உயிரிழப்பு!

தென்மராட்சி, செப். 04

தென்மராட்சியை சேர்ந்த 80 வயது மூதாட்டி ஒருவர் கொரோனா தொற்றால் நேற்று உயிரிழந்தார்.



வரணி - இயற்றாலையை சேர்ந்த மூதாட்டி ஒருவரே இவ்வாறு உயிரிழந் தார். இவர், கடந்த சில நாட்களாக காய்ச் சலால் பீடிக்கப்பட்டிருந்தார்.

இந்த நிலையில், அவரின் சடலத்தில் சேகரிக்கப்பட்ட மாதிரி களின் அடிப்படையில் அவருக்கு கொரோனா தொற்று இருந் தமை உறுதிப்படுத்தப்பட்டது. (ஐ)

## செப். 13 காலை...

மாகாண மற்றும் பிரதேச சுகாதாரப் பணிப்பாளர்களும், இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டு, கோவிட் ஒழிப்பு தொடர்பில் முன்னெடுத்துள்ள நடவடிக்கைகள் தொடர்பிலான தகவல்களை முன்வைத்தனர்.

தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கையின் முன்னேற்றம் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில், இதன்போது தீர்க்கமாகக் கலந்துரையாடப்பட்டதுடன், 20 - 29 வயதுக்கு இடைப்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றல் நடவடிக்கையை, எதிர்வரும் இரண்டு வாரக் காலப்பகுதிக்குள் முன்னெடுப்பதற்கான தேவை தொடர்பிலும், இதன்போது அவதானம் செலுத்தப்பட்டது.

நாட்டின் அனைத்து மாவட்டங்களும் உள்ளடங்கும் வகையில் மேற்கொள்ளப்படும் 30 வயதுக்கு மேற்பட்டோருக்கான தடுப்பூசி ஏற்றும் வேலைத்திட்டத்தை வெற்றிகரமாக முன்னெடுக்க உதவிய சுகாதார, பாதுகாப்பு உள்ளிட்ட அனைத்துத் தரப்பினருக்கும், ஜனாதிபதி அவர்கள் தனது பாராட்டுகளைத் தெரிவித்துக் கொண்டார்.

சுகாதாரத் துறையினரின் பரிந்துரையின் அடிப்படையிலேயே, தடுப்பூசி நிலையங்களுக்கான தடுப்பூசித் தொகை தீர்மானிக்கப்படுகிறது. இருப்பினும், ஒட்டுமொத்தமாக முன்னெடுக்கப்படும் தடுப்பூசி ஏற்றல் பணிகளைப் புறந்தள்ளிவிட்டு, ஓரிரு தடுப்பூசி நிலையங்களில் இடம்பெறும் சில சம்பவங்களைப் பெரிதுபடுத்திக் காட்டுவதற்கு ஊடகங்கள் முன்னெடுக்கும் முயற்சிகள் கவலைக்குரியனவாக உள்ளனவென்று, மாகாண சுகாதாரப் பணிப்பாளர்கள் சுட்டிக்காட்டினர்.

தடுப்பூசி ஏற்றலின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வெற்றியுடன், புதிய பொதுமைப்படுத்தல் முறைமைக்கு ஏற்ப, நாட்டின் பொருளாதாரத்தை முன்னோக்கிக் கொண்டுசெல்வதன் அவசியம் பற்றி, ஜனாதிபதி அவர்கள் எடுத்துரைத்தார்.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் நடைமுறையில் உள்ள போதிலும், தடுப்பூசி ஏற்றல் வேலைத்திட்டத்தின் வெற்றியுடன், ஏற்றுமதித் துறையில் ஈடுபடும் தொழிற்சாலைகளைத் தொடர்ந்து முன்னெடுக்க முடிந்தமையானது, பொருளாதாரத்துக்குக் கிடைத்த பெரிய ஆறுதலாக உள்ளதென்று, நிதி அமைச்சர் பெசில் ராஜபக்ஷ அவர்கள் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ, அமைச்சர்களான பஸில் ராஜபக்ஷ, கெஹலிய ரம்புக்வெல்ல, டலஸ் அழகப்பெரும, பவித்ரா வன்னியாரச்சி, ஜொன்ஸ்டன் பெர்ணான்டோ, ரோஹித்த அபேகுணவர்த்தன, ரமேஷ் பதிரண, நாமல் ராஜபக்ஷ, பிரசன்ன ரணதுங்க, இராஜாங்க அமைச்சர்களான சுதர்ஷனி பெர்ணான்டோபுள்ளே, சிசிர ஜயகொடி, சன்ன ஜயசுமன, பாராளுமன்ற உறுப்பினர்களான மதுர விதானகே, ஜனாதிபதியின் தலைமை ஆலோசகர் லலித் வீரதுங்க, சுகாதாரச் செயலாளர் மேஜர் ஜெனரல் விசேட வைத்திய நிபுணர் சஞ்ஜீவ முனசிங்க, சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் டொக்டர் அசேல குணவர்தன ஆகியோரும், முப்படைத் தளபதிகள், பொலிஸ்மா அதிபர், கொவிட் ஒழிப்பு விசேட செயலணியின் உறுப்பினர்கள், மாகாணச் சுகாதாரப் பணிப்பாளர்கள் ஆகியோரும், இந்தக் கலந்துரையாடலில் கலந்துகொண்டிருந்தனர்.

## யாழ்ப்பாணத்தில்...

றையில் 9 பேரும், நல்லூரில் 26 பேரும், சண்டிலிப்பாயில் 7 பேரும், உடுவிலில் 35 பேரும், தெல்லிப்பழையில் 7 பேரும், வேலணையில் 6 பேரும், மருதங்கேணியில் 14 பேரும், காரைநகரில் ஒருவரும் அடையாளம் காணப்பட்டனர்.

இதேசமயம், நேற்றிரவு வெளியான போதனா மருத்துவமனை ஆய்வுகூட பி.சி.ஆர். முடிவுகளின்படி கோப்பாய் மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேர், யாழ். போதனா மருத்துவமனையில் 12 பேர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 5 பேர், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 4 பேர், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் 4 பேர், யாழ்ப்பாணம் மாநகர மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர், புங்குடுதீவு பிரதேச மருத்துவமனையில் ஒருவர் என 39 பேர் தொற்றாளர்களாக உறுதி செய்யப்பட்டனர்.

இதன்மூலம் யாழ்ப்பாணம் மாவட்டத்தில் 2020 மார்ச்சிலிருந்து நேற்றிரவு வரை 13 ஆயிரத்து 349 பேர் கோவிட்-19 நோய்த் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர். (ஐ-3)

## 113 ஆண்கள்...

களின் மொத்த எண்ணிக்கை 9 ஆயிரத்து 806 ஆக அதிகரித்துள்ளது என்று அரச தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

நேற்றுமுன்தினம் உயிரிழந்தவர்களில் 89 பெண்களும், 113 ஆண்களும் உள்ளடங்குகின்றனர்.

இதில் ஆண்கள் இருவரும், பெண்கள் மூவரும் என 05 பேர் 30 வயதுக்குட்பட்டவர்களாவர். 24 ஆண்கள், 18 பெண்கள் என 42 பேர் 30 - 59 வயதுக்கு இடைப்பட்டவர்களாவர். 155 பேர் 60 வயதுக்கு மேற்பட்டவர்களாவர். இதில் 87 ஆண்களும், 68 பெண்களும் அடங்குகின்றனர். (இ)

## நியூசிலாந்தில்...

பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த கத்திக்குத்து தாக்குதலில் ஆறு பேர் காயமடைந்ததையடுத்து பெரும் பதற்ற நிலை காணப்பட்டது என சம்பவத்தை நேரில் கண்டவர்கள் தெரிவித்துள்ளனர். தாக்குதல் நடத்தியவரை பொலிஸார் ஒரு நிமிட நேரத்திலேயே சுட்டுக்கொன்றனர் என பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் தெரிவித்துள்ளார். கத்திக்குத்தில் காயமடைந்த ஆறு பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

தாக்குதலை மேற்கொண்டவர் ஐஎஸ் அமைப்பின் கொள்கைகளால் ஈர்க்கப்பட்ட இலங்கை பிரஜை என நியூசிலாந்து பிரதமர் ஜசிந்தா ஆர்டென் தெரிவித்துள்ளார். "தாக்குதலை மேற்கொண்டவர் இலங்கை பிரஜை. பத்து வருடங்களாக இங்கு வசிப்பவர் அவர் ஐ.எஸ். அமைப்பின் தீவிரவாத கொள்கைகளால் ஈர்க்கப்பட்டிருந்தார். பொலிஸார் அவரை தொடர்ச்சியாக கண்காணித்து வந்தனர்" என நியூசிலாந்து பிரதமர் தெரிவித்துள்ளார்.

"ஒரு வன்முறை தீவிரவாதி அப்பாவி நியூசிலாந்து மக்கள் மீது தாக்குதலை மேற்கொண்டார். அவர் ஐ.எஸ்.ஐ.எஸ். கொள்கையை ஆதரித்தவர். ஐந்து வருடங்களாக அவர் எங்கள் கண்காணிப்பிற்கு உரியவராக காணப்பட்டார். அந்த நபர் தாக்குதலை ஆரம்பித்து 60 செக்கன்களில் கொல்லப்பட்டுவிட்டார்" எனவும் பிரதமர் தெரிவித்துள்ளார்.

இதேவேளையில், "அவர் பொருள் கொள்வனவிற்காகவே வணிகவளாகத்திற்கு சென்றுள்ளார் என பொலிஸார் கருதினார்கள். ஆனால் அவர் அங்கு கத்தியை வெளியில் எடுத்தவுடன் பொலிஸார் உஷாரடைந்தனர். நாங்கள் அவரை கண்காணிப்பதற்காக அனைத்தையும் செய்தோம், 60 செக்கன்களில் அவரை செயல் இழக்க செய்ய முடிந்தமை நாங்கள் அவரை எவ்வாறு உன்னிப்பாக அவதானித்தோம் என்பதை வெளிப்படுத்தியுள்ளது" என பொலிஸ் அதிகாரி தெரிவித்துள்ளார்.

கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்ட இலங்கையர் தான் கண்காணிப்டுவதை நன்கு அறிந்திருந்தார். அதனால் அவரிடமிருந்து சற்று தொலைவிலிருந்தே அவரை கண்காணிக்கவேண்டிய நிலையில் பாதுகாப்பு தரப்பினர் காணப்பட்டனர். தாக்குதலை மேற்கொண்டவர் தனித்தே செயற்பட்டார் என கருதுகின்றோம் என அவர்கள் எனவும் அவர்கள் குறிப்பிட்டனர்.

ஆனால், நியூசிலாந்தின் நீதிமன்ற சட்டங்கள் காரணமாக கத்திக்குத்து தாக்குதலை மேற்கொண்ட இலங்கையர் குறித்த விபரங்களை வெளியிட முடியாத நிலை காணப்படுகின்றது என அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

# தேங்கியுள்ள கொரோனா சடலங்களை துரிதமாக அப்புறப்படுத்த நடவடிக்கை

## சுகாதார அமைச்சர் கெஹலிய உத்தரவு

கொழும்பு, செப். 04

நாட்டிலுள்ள சில வைத்தியசாலைகளில் அடையாளம் காணப்படாமல் நீண்ட நாட்களாகத் தேங்கியுள்ள சடலங்களை உரிய சட்ட ரீதியான நடவடிக்கைகளுக்கமைய துரிதமாக அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல ஆலோசனை வழங்கியுள்ளார்.

நீதிமன்ற நடவடிக்கைகள் போன்ற வெவ்வேறு காரணிகளுக்காக சில சடலங்களை வைத்தியசாலைகளிலிருந்து அப்புறப்படுத்த முடியாமலுள்ளது.

அவை தொடர்பில் துரிதமாக அவதானம் செலுத்தி , அவற்றை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறு சுகாதார அமைச்சர் அறிவுறுத்தினார்.

ஒன்றிணைந்த அரச சேவை தாதியர் சங்கத்துடனான சந்திப்பின்போது கவனத்தில் கொள்ளப்பட்ட விடயங்களின் அடிப்படையில் இது தொடர்பில் ஆராயுமாறு அமைச்சர் சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்துக்கு ஆலோசனை வழங்கினார்.



இவ்வாறு தேங்கியிருந்த சடலங்களில் சில அண்மையில் அப்புறப்படுத்தப்பட்டுள்ளதோடு தற்போது எஞ்சியுள்ள சடலங்களையும் அவ்வாறே அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் அவர் பணிப்புரை விடுத்தார். (இ)

# சட்டவிரோத மருந்து பொருட்களுடன் இந்திய பிரஜைகள் இருவர் சிக்கினர்

கொழும்பு, செப். 04

இலங்கைக்கு சட்டவிரோதமாக மருந்துப் பொருட்களைக் கொண்டு வந்த இரண்டு இந்தியப் பிரஜைகள் கட்டுநாயக்க விமான நிலையத்தில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சென்னையில் இருந்து நேற்று அதிகாலை 1.15 மணிக்கு கட்டுநாயக்க விமான நிலையத்துக்கு வருகை தந்த இந்தியன் ஏர்லைன்ஸ் விமானத்தில் வந்திறங்கிய இருவரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று சுங்கப் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

இருவரின் கைகளில் இருந்த தனிப்பட்ட பைகளில் மருந்துப்பொருட்கள் மறைத்து வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிக்கப்பட்டதை அடுத்து அவை சுங்க அதிகாரிகளால் கைப்பற்றப்பட்டதுடன், குறித்த இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

சுகாதார அமைச்சு மற்றும் மருந்து ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவின் சட்டபூர்வ அனுமதியின்றி குறித்த மருந்துகள் நாட்டுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளன என்றும் சுங்கப் பேச்சாளர் குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு அவர்களிடம் இருந்து பல்வேறு நோய்களுக்கு சிகிச்சையளிக்கப் பயன்படுகின்ற 10 வகையான மருந்துகள் கைப்பற்றப்பட்டன என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, குறித்த சம்பவம் தொடர்பில் விமான நிலையத்தில் சுங்க அதிகாரிகளால் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன என்றும் சுங்கத் திணைக்களத்தின் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்துள்ளார். (இ)

## யாழ்ப்பாணத்தில்...

ழந்தனர்.

இதேபோன்று பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் உயிரிழந்த ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

தவிர, சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் வரணி - இயற்றாலையை சேர்ந்த 80 வயது மூதாட்டி ஒருவர், நுணாவில் கிழக்கைச் சேர்ந்த 90 வயது பெண் ஒருவரும் உயிரிழந்தனர். (ஐ-3)

## தாக்குதல்தாரி...

ரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

குறித்த இலங்கையர் 10 ஆண்டுகளாக நியூஸிலாந்தில் வசித்து வந்தவர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்தத் தாக்குதலானது, பயங்கரவாத தாக்குதலாகும் என நியூஸிலாந்து பிரதமர் ஜசிந்தா ஆர்டன் தெரிவித்துள்ளார்.

குறித்த இலங்கையர் கண்காணிப்பில் இருந்தவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அடையாளம் காணப்படாத குறித்த நபர், ஐ.எஸ் பயங்கரவாத அமைப்பால் ஈர்க்கப்பட்டவர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகள் தொடர்வதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே குறித்த நபர் பற்றிய தகவல்களைத் தருமாறு இலங்கை அரசாங்கம் கோரியுள்ளது.

## நேற்று 3,644...

மேலும் 1,998 பேர் நேற்று குணமடைந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனா தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 80 ஆயிரத்து 166 ஆக அதிகரித்துள்ளது. (இ)

## புதுக்குடியிருப்பில்...

முல்லைத்தீவு பொது மருத்துவமனையில் 4 பேர், மல்லாவி ஆதார மருத்துவமனையில் 3 பேர், புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனையில் ஒருவர் என முல்லைத்தீவு மாவட்டத்தில் 73 பேர் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்டத்தில் கோப்பாய் மருத்துவ அதிகாரி பிரிவில் 12 பேர், யாழ். போதனா மருத்துவமனையில் 12 பேர், சாவகச்சேரி ஆதார மருத்துவமனையில் 5 பேர், தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் 4 பேர், ஊர்காவற்றுறை ஆதார மருத்துவமனையில் 4 பேர், யாழ்ப்பாணம் மாநகர மருத்துவ அதிகாரி பிரிவில் ஒருவர், புங்குடுதீவு பிரதேச மருத்துவமனையில் ஒருவர் என 39 பேர் தொற்றாளர்களாக உறுதி செய்யப்பட்டனர்.

வவுனியா பொது மருத்துவமனையில் மூவரும், செட்டிக்குளம் ஆதார மருத்துவமனையில் இருவருமாக 5 பேர் வவுனியா மாவட்டத்திலும், மன்னார் பொது மருத்துவமனையில் 3 பேரும், முசலி மருத்துவ அதிகாரி பிரிவில் 2 பேர் என ஐவரும், கிளிநொச்சி மாவட்டத்தில் இருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu




# தனிக்கட்சிகளாக செயல்படுவது எங்களை பலவீனப்படுத்திவிடும்!

## மாவை சேனாதிராசா

யாழ்ப்பாணம், செப். 04

தமிழ் மக்களின் விடுதலைப் போராட்டத்தில் நாங்கள் தனித்தனியாக பிளவுபட்டு தனித்தனி கட்சிகளாக செயல்படுவது எங்களை பலவீனப்படுத்திவிடும் என்று தமிழ் அரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

அவரின் இல்லத்தில் நடந்த ஊடக சந்திப்பிலே தமிழ்த் தேசிய கூட்டமைப்பிற்குள் பிளவுகள் ஏற்பட்டிருப்பதாகவும் தமிழ் அரசுக் கட்சி தனித்தும் ஏனைய கட்சிகள் தனித்து இயங்கப் போவதாகவும் வெளியான செய்திகளின் உண்மைத்தன்மை தொடர்பாக ஊடகவியலாளர்கள் கேள்வியெழுப்பியபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், இது ஒரு பொறுப்பற்ற ரீதியான பிரசாரம். நாங்கள் எல்லோரும் ஒன்றுபட்டு செயல்பட வேண்டும். தமிழ் மக்களுடைய விடுதலைப் போராட்டத்தில் நாங்கள் தனித்தனியாக பிளவுபட்டு தனித்தனி கட்சிகளாக செயல்படுவது எங்களை பலவீனப் படுத்திவிடும். எங்களுடைய இலக்கை அடைய முடியாது கொரோனா நேரத்தில் இவ்வாறான கருத்துக்களுக்கு இடமளிக்கக்கூடாது.

மனித உரிமைப் பேரவையில் 46/1என்கிற தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆறு மாதங்கள் கடந்து விட்டது. எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 13ஆம் திகதி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர் பச்லெற் அம்மையார் இலங்கை தொடர்பாக முக்கியமான உரையாற்றுவாரென எதிர்பார்க்கிறோம். சர்வதேச நெருக்கடியை சமாளிப்பதற்காக அரசாங்கம் ஒரு பேச்சுக்காக தாங்கள் மனித உரிமைகள் பேரவையுடன் ஒத்துழைப் போமென கூறுவதை நாங்கள் நம்பி ஏமாந்துவிடக்கூடாது.

மனித உரிமைகள் பேரவையின் ஆணையாளர், நிறைவேற்றப்பட்ட தீர்மானமும் இலங்கை அரசாங்கத்தின் நிலைப்பாடு, கொடுத்த வாக்குறுதிகள் எந்த அளவுக்கு நிறைவேற்றி இருக்கிறார்கள் என்பது தொடர்பில் உரையாற்றுவார் என கருதுகிறோம்.

அதையொட்டி தமிழ் அரசுக் கட்சி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கின்ற தமிழ் தேசியத்தை வலியுறுத்தும் கட்சிகளும் ஒன்றுபட்டு மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு பின்னர் நடைபெறுகின்ற இலங்கை அரசாங்கத்தின் விரோதமாக இடம்பெறுகின்ற விடயங்கள் தொடர்பாக எங்கள் மதிப்பீட்டை நாங்கள் அனுப்ப வேண்டும்.

இது தொடர்பாக இரண்டு விதமான அபிப்பிராயங்கள் காணப்படுகின்றது ஒன்று கட்சிகள் மத்தியில் நாங்கள் ஒரு நிலைப்பாட்டை அனுப்பி வைப்பது, இரண்டாவது பொது அமைப்புகளிடம் இருந்து கிடைக்கின்ற தகவல்கள் தயாரிப்புகளை மையமாக வைத்து பாராளுமன்ற உறுப்பினர்கள் கட்சித் தலைவர் கையெழுத்திட்டு ஓர் அறிக்கையை அனுப்பி வைப்பது என்பதாகும். அநேகமாக அந்த அறிக்கை இன்று (நேற்று) நண்பகலுக்கு முன்பு உருவாக்கப்பட்டிருக்கும்.

அதைவிட கட்சிகளின் சார்பிலே சில அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு இருக்கிறது. நாங்கள் அனைவரும் ஒன்றுபட்டு அனுப்பவேண்டும். தனித்தனியாக கொடுக்கப் போகின்றோம் என்ற செய்திகளை தவிர்த்து தமிழ் தேசியத்தை அடிப்படையாகக் கொண்ட கட்சிகள் இதுவரை ஒன்றுபட்டு செயல்படுகின்ற தீர்மானங்கள் என்ற அக்கறையோடு செயல்படுகின்ற கட்சிகள் இன்று (நேற்று) அல்லது நாளை (இன்று) மனித உரிமைகள் ஆணையாளருக்கு அனுப்பி வைப்பார்கள் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கிறது - என்றார். (ஐ)

# புதையல் திருட்டு; ஏழு பேர் மாட்டினர்

கொழும்பு, செப். 04

யால தேசிய வனத்திலுள்ள தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த சிதுல்பவ்வ புனித பூமி பகுதியில் இடம்பெற்ற புதையல் திருட்டு சம்பவம் தொடர்பில் இதுவரையில் 7 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

கடந்த 31ஆம் திகதி இரவு அங்குள்ள சிறிய தூபியை உடைத்து புதையல் திருடப்பட்டிருந்தது. குறித்த திருட்டுச் சம்பவம் இடம்பெற்றிருந்த நிலையில், அது தொடர்பில் விசாரணைகளை முன்னெடுக்க 10 பொலிஸ் குழுக்கள் நியமிக்கப்பட்டிருந்தன.

இதன்படி முதலில் சந்தேகநபர் ஒருவரைக் கைது செய்திருந்த பொலிஸார் அவரிடம் விசாரணை நடத்தி மேலும் இருவரைக் கைதுசெய்திருந்தனர்.

இதன்பின்னர் தொடர்ந்தும் விசாரணை நடத்தி வந்த பொலிஸ் குழுக்கள் மேலும் நான்கு சந்தேகநபர்களைக் கைது செய்துள்ளனர்.

தொல்பொருள் முக்கியத்துவம் வாய்ந்த குறித்த பௌத்த புனிதஸ்தலத்தை காவன்திஸ்ஸ மன்னன் நிர்மாணித்தார் என்று வரலாற்று ஆசிரியர்கள் கூறுகின்றனர். (இ)

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 23 - 07 - 1953 | 28 - 08 - 2021 |

### திருமதி தாரிணி கதிர்காமநாதன் (சுதா)

சண்டிலிப்பாயைப் பிறப்பிடமாகவும், அளவெட்டி, கனடா Toronto ஆகிய இடங்களை வசிப்பிடமாகவும் கொண்ட தாரிணி கதிர்காமநாதன் அவர்கள் கடந்த (28.08.2021) சனிக்கிழமை அன்று இறைவனடி சேரந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுந்தரமூர்த்தி (சித்திர ஆசிரியர்- மகாஜனக் கல்லூரி) - விசாலாட்சி தம்பதியரின் அருமை மகளும், காலஞ்சென்ற முருகையா மற்றும் மங்கையற்கரசி தம்பதியரின் அருமை மருமகளும், கதிர்காமநாதன் (இளைப்பாறிய இலங்கை புகையிரத நிலைய அதிபர்) அவர்களின் பாசமிகு மனைவியும், அஜந்தன், கோகுலன், நிலானி ஆகியோரின் அருமைத் தாயாரும்,சுஜிதா, நீரூஜா, பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும், ஆர்ஜன், ஆராதனா, ஜேலன், ரணீலன், பிரநில், ஐஷ்னா, ஆத்விக் ஆகியோரின் அருமைப் பேத்தியும், காலஞ்சென்றவர்களான பவானந்தன் (ஆனந்தன்), வசுமதி(சந்திரா), சசிகலா, சூரியகலா(ராணி), ஸ்ரீகாந்த் மற்றும் நிர்மலா (இந்திரா), மேகலா(பாமா), நளினி (ரதி) ஆகியோரின் அன்புச் சகோதரியும், இராசநாயகம் (இலங்கை), கிருபாதரன் (அவுஸ்திரேலியா), சிவகுமார் (பிரான்ஸ்), காலஞ்சென்றவர்களான நாகேஸ்வரி, உருத் திரமூர்த்தி, சத்தியேஸ்வரி, பராசக்தி, சிவநாதன் ஆகியோரின் பாசமிகு மைத்துனியும் ஆவார்.

பார்வைக்கு
Sunday, 05 Sep 2021 6:00 PM - 9:00 PM
Monday, 06 Sep 2021 8:00 AM - 8:30 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

கிரியை
Monday, 06 Sep 2021 8:30 AM - 10:00 AM
Chapel Ridge Funeral Home & Cremation Centre
8911 Woodbine Ave, Markham, ON L3R 5G1, Canada

தகனம்
Monday, 06 Sep 2021 10:30 AM
Highland Hills Crematorium 12492 Woodbine Avenue, Gormley, Ontario, L0H 1G0, Canada

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
அஜந்தன் - மகன்
Mobile : +14168895883

தகவல்
**குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்



| பிறப்பு | இறப்பு |
|---|---|
| 26 - 04 - 1951 | 02 - 09 - 2021 |

### அமிர்தரட்ணராஜா இராசயோகன்

நெடுந்தீவைப் பிறப்பிடமாகவும், நெடுந்தீவு, இந்தியா தமிழ்நாடு, பிரித்தானியா லண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட அமிர்தரட்ணராஜா இராசயோகன் அவர்கள் கடந்த (02.09.2021) வியாழக்கிழமை அன்று சிவபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்ற சுப்ரமணியம் நாகேந்திரர் (கொடிவேல் விதானையார்) - செல்லம்மா தம்பதியரின் மூத்த அன்புப் பேரனும், காலஞ்சென்ற அமிர்தரட்ணராஜா(ராசா வாத்தியார்) - அமிர்தம் தம்பதியரின் மூத்த செல்வப் புதல்வரும், காலஞ்சென்ற கந்தப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் அன்பு மருமகனும், நிர்மலாதேவி (பேபி) அவர்களின் அன்புக் கணவரும், அனித்ரா (அனு- லண்டன்), சதீஸ்(இலங்கை), அமிர்தா (கனடா), நாகேந்திரன் (அயன்- இலங்கை) ஆகியோரின் பாசமிகு தந்தையும், விமலலக்சுமி (இலங்கை), பொன்னம்பலம் (ராஜ்- லண்டன்), காலஞ்சென்ற நாகேந்திரர (சின்னா), இராமநாதன்(மன்னா- லண்டன்), கோகிலலக்சுமி (ஆனந்தி- லண்டன்), றோமகவாணி, முருகதாசன், சாண்டில்யவாணி, கேசவவர்மா, கண்ணப்பன்(கனடா), ஹேமகவாகினி (கொலண்ட்), கிரிநிதாகௌரி, உமாமகேசனா, அமுதவேணி (கனடா) ஆகியோரின் பாசமிகு சகோதரரும்,பிரகலாதன் (கண்ணன்- லண்டன்), ஜெஸ்ரின் தங்கராஜா(கனடா) ஆகியோரின் அன்பு மாமனாரும், சாரகா, அமிர்தராஜ், யாழினி, நிலானி, அக்ஷயா, கயல், லெமோரியன் ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும், ஜேந்திரா, யோகேந்திரா, சோபிகா, ஆர்திகா, பிரவின் ஆகியோரின் அன்பு மாமாவும்,சந்திரசேகரம்பிள்ளை, வேனுநாயகி, அன்ரன், புஸ்பம், காலஞ்சென்றவர்களான கனகசபை, சிவநாதன், குகராசா மற்றும் வரதராசா, கோசலாதேவி, குலகலாதேவி, லலிதாதேவி ஆகியோரின் பாசமிகு மைத்துனரும், லீசா, சியாரா, யதீரன், யஸ்மின், தியா ஆகியோரின் பாசமிகு தாத்தாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியை எதிர்வரும் (06.09.2021) திங்கட்கிழமை அன்று பி.ப 03:00 மணியளவில் நடைபெற்று பின்னர் கோம்பயன் மணல் இந்து மயானத்தில் பூதவுடல் தகனம் செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தொடர்புகளுக்கு:**
அமுதா - மகள்
Mobile : +16474483064

தகவல்
**குடும்பத்தினர்.**




இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 04.09.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
7.05 மணி : உளவியல் கருத்து
7.15 மணி : கதைவழி அறமொழி-யோன்சன் ராஜ்குமார் ஆசிரிய ஆலோசகர் யாழ்ப்பாணம் வலயக்கல்வி
7.30 மணி : பத்திரிகைகள் ஒரு பார்வை
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : TIK TOK
11.00 மணி : அந்தக்காலம் இந்தக்காலம் -மறு ஒளிபரப்பு

**பகல்**
12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)
1.00 மணி : மழலைகள் நேரம்-சிறுவர் நிகழ்ச்சி
1.30 மணி : WEEK END MOVIE- திரைப்படம்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : அந்தி மந்தாரை (நேரலை)
6.00 மணி : எது சரி? எது பிழை

**இரவு**
7.00 மணி : கொழும்பு-16- உங்களுக்கு தெரியாத கொழும்பு புத்தம் புதிய நிகழ்ச்சி



7.30 மணி: மனிதனின் மறுபக்கம்- புத்தம் புதிய நிகழ்ச்சி இவ்வாரம் சார்ளி சப்ளின்



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி: சொல்லாடுகளம் -மசாற்ற மாநகரம்



10.00 மணி : நெற்றிக்கண்

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன் கவுண்டமணி செந்தில் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN MUSIC HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
5.15 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
6.00 மணி : தரம் 07 - தமிழ்
6.45 மணி : தரம் 08 - தமிழ்
7.30 மணி : தரம் 09 - கணிதம்
8.15 மணி : தரம் 10 - கணிதம்
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) நாடகமும் அரங்கியலும்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்

**பகல்**
12.00 மணி : தரம் 06 - விஞ்ஞானம்
1.00 மணி : தரம் 07 - தமிழ்
2.00 மணி : தரம் 08 - தமிழ்
3.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சங்கீதம்
3.40 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
4.20 மணி : க.பொ.த சாதாரண தரம் விஞ்ஞானம்
5.00 மணி : க.பொ.த சாதாரண தரம் சித்திரம்
5.40 மணி : க.பொ.த சாதாரண தரம் புவியியல்
6.20 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

**இரவு**
7.00 மணி : க.பொ.த சாதாரண தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா-01
10.00 மணி : பாடல்கள்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா-02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி :செய்திகள்
7.30 மணி : அருளுரை

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி : நாளொரு நற்சிந்தனை
7.30 மணி : அன்பின் மகிழ்வு குடும்பம்
8.00 மணி : ஜெபமாலை
9.30 மணி : இறைமகன் யேசுவின் அற்புதங்கள் (மறுஒலிபரப்பு)
10.00 மணி: அன்னை மரியா
10.30மணி : திருப்பலி (யாழ்ப்பாணம்)
11.30 மணி : ஜெபங்களும் திருகோணமலை (சனி மறு ஒளிபரப்பு)

**பகல்**
12.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
01.00 மணி : திருப்பலி (மட்டக்களப்பு)
02.00 மணி : நற்கருணை ஆராதனை (திருகோணமலை)
03.00 மணி : திருப்பலி யாழ்ப்பாணம் (மறு ஒளிபரப்பு)
04.00 மணி: திருப்பலி (மட்டக்களப்பு)
05.00 மணி : திருப்பலி (திருகோணமலை)
06.00 மணி : நாளொரு நற்சிந்தனை (மறு ஒளிபரப்பு)
07.00 மணி : ஞானவழி
07.30 மணி : அன்பியம்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : இஜ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
3.30 மணி : பள்ளிவாசல் ஆவணப்படம்
4.00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டூன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு